289

வ்யயஹுல தை மீ

ஸம்புடம் - 6
ஸஞ்சிகை - 1

289

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JAN 1947
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,
சென்னை.

3L
22.1.47 N47.6.1
189229

January 1947
Vol. o No. 1

விஷய ஸூசிகை

1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	....	2
2.	வென்று விளம்பும் வேதியன்	....	7
3.	திவ்ய ஹவிஸ்	....	10
4.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	....	14
5.	தேவபாஷா ப்ரபாவம்	....	15
6.	செய்திகள்	....	18
7.	வேதாந்த விசாரம்	....	19
8.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	...	23

ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவின் 1946-ம் வருஷத்து டிஸம்பர் மாதத்துச் சந்தா வரவு.

				ரூ.	அ.
17	ஸ்ரீ	R. A. சேஷாத்ரி ஐயங்கார், மயிலாப்பூர்.	....	3	0
70	,,	G. ஸ்ரீநிவாஸாசாரியர், கோயம்புத்தூர்.	....	6	0
141	,,	K. K. ஸ்ரீநிவாஸையங்கார், அம்பாஸமுத்ரம்.	....	3	0
160	,,	ஸௌம்ய நாராயணாசார்யர், குளித்தலை	....	3	0
189	,,	P. N. ஸ்ரீநிவாஸாசார்யர், மயிலாப்பூர்.	....	3	0
201	,,	V. K. பார்த்தஸாரதி, திருவல்லிக்கேணி.	....	6	0
222	,,	K. குப்புஸாமி ஐயங்கார், ஆடுதுறை.	....	3	0
241	,,	T. P. பார்த்தஸாரதி, பார்க்டவுன், சென்னை.	....	3	0
259	,,	T. G. மணவாளப் பெருமாள் ரெட்டியார், ஆலந்தூர்.		3	0
277	,,	நூனிலயத் தலைவர், அண்ணாமலை பல்கலைக் கழகம்		3	0
304	,,	ஸ்வாமி ராகவாசார்யர், குன்வார்ப்பூர், பெரில்லி	....	2	0
390	,,	P. K. ஸ்ரீநிவாஸராகவசார்யர், திண்டிவனம்.	....	3	0
424	,,	P. குப்புஸாமி ஐயங்கார், திருவெண்ணெய் நல்லூர்	....	3	0
443	,,	P. N. சேஷையங்கார், ஸ்ரீரங்கம்.	....	3	0
475	,,	G. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், தூசி.	....	3	0
515	,,	V. S. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்.	....	3	0
582	,,	A. C. சடகோபாசார்யர், ஒலக்கூர்.	....	3	0
647	,,	T. K. சேஷாத்ரி, ஹார்டோய் (யு. பி.)	....	3	0
687	,,	R. ஸ்ரீநிவாஸையங்கார், காக்கிநாடா.	....	3	0
751	,,	M. V. ராமஸ்வாமி ஐயங்கார், புதுப்பேட்டை.	....	3	0
754	,,	T. V. ராமஸ்வாமி ஐயங்கார், திருநெல்வேலி	....	3	0
755	,,	G. K. ராமஸ்வாமி ஐயங்கார், புது டெல்ஹி.	....	3	0
			ரூ.	71	0

ஸ்ரீ:

ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவின் 1947-ம் வருஷத்து பிப்ரவரி மாதத்துச் சந்தா வரவு.

				ரூ.	அ.
8.	ஸ்ரீ.	S. ராகவாசார்யர், பம்பாய்	...	3	0
14.	,,	N. S சாரி, பம்பாய்	...	3	0
16.	,,	C. S. ஐயங்கார், பம்பாய்	...	3	0
18.	,,	M. K. ஸ்ரீநிவாஸையங்கார், பம்பாய்	...	3	0
22.	,,	M. R. ஆராவமுதய்யங்கார், பம்பாய்	...	3	0
25.	,,	T. K. R. ஐயங்கார், பம்பாய்	...	3	0
26.	,,	V. V. ஐயங்கார், பம்பாய்	...	3	0
27.	,,	R. L. நாராயணன், கல்கத்தா	...	3	0
47.	,,	S. வரதாசாரியர், பம்பாய்	...	3	0
50.	,,	S. ராமஸ்வாமி, பம்பாய்	...	3	0
51.	,,	S. க்ருஷ்ணமாசாரியர், பம்பாய்	...	3	0
59.	,,	A. ரங்காசார்யர், காரைக்குடி	...	3	0
61.	,,	L. ஸ்ரீராமாசார்யர், ஆரணி	...	3	0
67.	,,	T. S. பிச்சுவையங்கார், திருக்குறுங்குடி	...	3	0
129.	,,	T. K. ஸுந்தரராஜ ஐயங்கார், திருவானைக்கோயில்	...	6	0
138.	,,	R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஸெகந்த்ராபாத்	...	3	0
161.	,,	S. திருவேங்கடாசார்யர், எழும்பூர், சென்னை	...	3	0
170.	,,	T. தோதாத்ரி ஐயங்கார், திருச்சி	...	3	0
175.	,,	B. K. குப்புஸாமி அய்யங்கார், குத்தி	...	3	0
190.	,,	R. ஸுந்தரராஜன், மதுரை	...	3	0
230.	,,	K. பார்த்தஸாரதி, பம்பாய்	...	3	0
231.	,,	P. S. வீரராகவாசார்யர், தேவனூர்விளாகம்	...	3	0
233.	,,	M. S ராஜகோபாலன், உத்தர்ப்புரா	...	3	0
294.	,,	I. ஸ்ரீநிவாஸாசாரியர், சைதாப்பேட்டை	...	1	0
367.	,,	ஆயநம் க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மதுராந்தகம்	...	3	0
374.	,,	V. ரங்கஸாமி, ஈரோட்	...	3	0
388.	,,	D. வேதாந்தாசார்யர், கல்கத்தா	...	3	0
450.	,,	V. K. ஐயங்கார், இண்டோர்ஸிடி	...	3	0
486.	,,	N. V. சாரி, பம்பாய்	...	3	0
543.	,,	K. சார்ங்கபாணி ஐயங்கார், திருவெண்ணெய்நல்லூர்	...	3	9
562.	,,	A. நரஸிம்மாசார்யர், கல்கத்தா	...	3	0
578.	,,	K. V பாஷ்யமய்யங்கார், சென்னை	...	3	0
631.	,,	T. கோபாலாசார்யர், போஸ்ட்காடிபெரோ	...	3	0
675.	,,	K. G ஸந்தாநம் ஐயங்கார், கும்பகோணம்	...	3	0
699.	,,	P. T. ஸ்ரீநிவாஸாசார்யர், மயிலாப்பூர்	...	4	0
712.	,,	M. வரததேசிகாசார்யர், வ்ருத்தாசலம்	...	3	0
727.	,,	T. N. தாதாசார்யர், பெங்களூர் ஸிடி	...	3	0
758.	,,	M. V. வரதாசார்யர், பம்பாய்	...	3	0
759.	,,	N. S. வெங்கடாசார்யர், பம்பாய்	...	3	0
760.	,,	E. R. V. ராகவன், பம்பாய்	...	3	0
761.	,,	V. S. D. ஆசார்யா, பம்பாய்	...	3	0
762.	,,	T. R. ரங்காசார்யர், பம்பாய்	...	3	0
765.	,,	T. லக்ஷ்மீநரஸிம்மாசார்யர், பம்பாய்	...	3	0
		மொத்தம் ரூ.	....	131	0

[குறிப்பு—ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் சென்ற மாதத்துச் சந்தாப் பட்டியலில் 448-ஸ்ரீ. S. ஆழ்வார் அய்யங்கார் திருநெல்வேலி டௌன் – ரூ. 4 என்றும், 464 ஸ்ரீ A. வேங்கடாசார்யர், கல்கத்தா – ரூ. 3 என்றும் இருத்தல் வேண்டும். 648 ஸ்ரீ. வேதவல்லியம்மாள் கொடவாசல் – ரூ. 3 என்பது ப்ரமாதத்தால் விடப்பட்டது.

ஸம்பாதகர்.

Regd. M. 4437.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

		சந்தாதாரர்களுக்கு ரூ. அ.	மற்றவர்கட்கு ரூ. அ.
1.	ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யானத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8	7—8
2.	உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0–12	1—0
3.	உக்தி நிஷ்டாபரணோத்யோதம் (,,)	0—8	0–12
4.	வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யானம் ... (க்ரந்த லிபி)	1—0	1—8
5.	ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—8	0–12
6.	ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3	0—4
7.	ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0	3—0
8.	ஈஸாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழி பெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0	1—8

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள்:—

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், சென்னை.

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Edited and Published by S. Vasudevachariar, 5, Ramaswami Street, Tyagarayanagar, Madras.



ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 6	ஸர்வஜித் ௵ ஆவணி ௴	ஸஞ்சிகை 8

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகாருண்யோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

::O::

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[6-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L.,
அட்வோகேட், திருச்சி.]

[சில நிமிஷம் முன் நடப்பையே சிந்தித்து, 'அநுசிந்த்ய']

" ஸம்ஸாராவர்த்தவேகப்ரசமநசுபத்ருக் தேசிகப்ரேக்ஷிதோஹம்
ஸந்த்யக்தோऽந்யைருபாயைரநுசிதசரிதேஷ்வத்ய சாந்தாபிஸந்தி: ।
நிச்சங்கஸ்தத்த்வத்ருஷ்ட்யா நிரவதிகதயம் ப்ரார்த்ய ஸம்ரக்ஷகம் த்வாம்
ந்யஸ்ய த்வத்பாதபத்மே வரத நிஜபரம் நிர்பரோ நிர்பயோஸ்மி ॥ '।

இந்த ச்லோகம் ந்யாஸ விம்சதியின் கடைசி ச்லோகம். இதை இங்கே இந்த அங்கத்தின் முடிவுக்கு வருகையில், தாம் தம்முடைய சொந்த பரத்தை ஸமர்ப்பித்த வரதனை ஸேவிக்கையில், தாம் ப்ரபத்தியை அநுஸந்தாநம் செய்ததை ஸ்மரித்து அநுசிந்தநம் செய்து அதையே இங்குப் பாடுகிறார். 'அநுசிந்த்ய' என்று இந்த ச்லோகத்தைப் படிப்பதற்கு முன் கூறியது, முன்பு அநுஸந்தித்த ப்ரபத்யநுஷ்டாந ச்லோகத்தை இங்கே பாடுவதாகக் காட்டுகிறது. ந்யாஸ விம்சதிக்கு ஸ்வாமி, பெரியோர்களின் இச்சையால் (ஸூர்யாஜ்ஞயா) தாமே வ்யாக்யாநம் செய்தார். அங்கே இந்த முடிவு ச்லோகத்திற்கு, 'உக்தமுபாயம் ஸம்ப்ரஹணாய ஸ்வாநுஷ்டாநத்வேந நிகமயதி' என்பது அவதாரிகை. தம்முடைய ஸ்வயம் ப்ரபத்யநுஷ்டாந ஸமயத்தில் இந்த ச்லோகம் அவதரித்ததாகக் கொள்ளலாம். 'ஸ்வ' என்னும் ஸ்வ வ்யாக்யாந பதம் மூல ச்லோக கர்த்தாவைக் குறிக்கும். 'விம்சதி' என்னும் எண்ணிக்கையும் விம்சதி லக்ஷணமான சாரீரக சாஸ்த்ரத்திலும் இரண்டு ஸூத்ரங்களால் பக்தி வித்யைகளோடு மோக்ஷ பலத்தைத் தருவதாக ஸூசிக்கப்படுவதால், ந்யாஸ வித்யையும் சாரீரக ப்ரதிபாத்யம் என்பதை ஸூசிப்பதற்காக ஆதரிக்கப்பட்டது போலும்.

அஹம் த்வத்பாதபத்மே ந்யஸ்ய—'உமக்கு சேஷனாகிய நான்' என்கையில் தாஸ்யத்தை நினைத்துக் கீர்த்தநம் செய்துகொண்டு. தாஸ்ய நிரூபிதமான அஹம் ஸ்வதந்த்ர கர்ப்பமான அஹத்தைப் போல்த் தீயதல்ல; இது நிரஹமான அஹம்; அஹமற்ற அஹம். இந்த அஹமும் தேசிக கடாக்ஷிதத்வத்தால் வந்த தென்பதை 'தேசிக ப்ரேக்ஷிதோஹம்' என்று சேர்த்துப் படிப்பதால் வ்யஞ்ஜநம்

செய்கிறார். 'ஆசார்ய வீக்ஷணத்தால் சுபமாய்க் கடாக்ஷிக்கப்பட்ட நான்' என்று தொடங்கி, 'அஸ்மி' என்று முடிக்கிறார்.

ஸந்த்யக்தாந்யோபாயை:—'மற்ற உபாயங்கள் எல்லாவற்றாலும் நான் த்யாகம் செய்யப்பட்டேன்'. 'ஸ பித்ரா ச பரித்யக்த: ஸுரைச்ச ஸமஹர்ஷிபி:' என்ற காகன் ப்ரகாரத்தை ஸூசிப்பிக்கிறார். அடைக்கலப்பத்தும் காகன் நினைவோடு தொடங்குகிறது. சரண மளித்த ராகவன் கபோத பக்ஷியை த்ருஷ்டாந்தமாக நினைத்தான். 'சரண மடைபவன் காதக பக்ஷியை த்ருஷ்டாந்த மாக நினைப்பன்' என்பர். இங்கே சரணாகதி ப்ரகரணத்தில் ப்ரஸித்தமான காக த்ருஷ்டாந்தத்தை 'ஸந்த்யக்த: அந்யை:' என்பதால் ஸூசிப்பிக்கிறார்.

"'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' என்கிறது, ஸர்வ தர்மங்களும் தன்னை யோக்யதா பர்யந்தமாகக் கழித்தபடியை முன்னிட்டுக் கொண்டு என்றபடி" என்று சரம ச்லோகாதிகார வாக்யத்தை இங்கே நினைக்கவேணும். 'அவை தங்களுக்கு யோக்யனல்ல வென்று என்னைக் கழித்தன. நான் அவற்றை அநுஷ்டிக்க அத்யந்தாசக்தியால் போகயதையில்லை' யென்று நைராச்யத்தை அடைந்து அகன்றேன். கர்த்தவ்யமான உபாய க்ருத்யங்களில் சக்தியில்லை யென்றாலும், துச்சரித்ரத்திலிருந்து நிவ்ருத்தி என்பதைப் பரித்யாகம் செய்யவே கூடாது. அதை நிவ்ருத்திப்பதில் அசக்தி யென்று சொல்லிக்கொண்டு சரண்யனை நெருங்க முடியாது. துச்சரித்ர நிவ்ருத்தியை த்ருடமாக—நிச்சயமாக—ஸங்கல்பம் செய்தே தீரவேண்டும்.

அநுசிதசரிதேஷு அத்ய சாந்தாபிஸந்தி:—அநுசித சரிதங்களில் அபிப்ராயத்தை ஒழித்து சாந்தனாகி. 'நாவிரதோ துச்சரிதாந்நாசாந்தோ நாஸமாஹித:। நாசாந்தமாநஸோ வாபி' என்ற கட ச்ருதியை நினைப்பது. இந்த ப்ராதிகூல்ய நிவ்ருத்தி ஸங்கல்பம் இந்த ப்ரபதந தசையில் கட்டாயம் இருக்க வேண்டு மென்பதை 'அத்ய' (இப்பொழுதும்) என்பதால் விளக்குகிறார்.

நிச்சங்கஸ் தத்வத்ருஷ்ட்யா—'இப்பொழுது ப்ராதிகூல்யம் இனிச் செய்வதில்லை யென்று ஸங்கல்பத்தாலும், முன்பு செய்த கொடிய தீவினைகளை நினைத்து நெருங்க பய மிராதோ? சங்கை யிராதோ? ரக்ஷிப்ப னென்ற மஹா விச்வாஸ மிருக்குமோ?' என்னும் சங்கையை சரண்ய ஸ்வபாவத்தின் தத்வத்தை நன்கு அறிந்ததால், சங்கை யென்னும் ஸம்சயம் பயம் முதலியன அடியோடு இருக்கமாட்டா என்பதை 'நிச்சங்க:' என்பதால் ஸூசிப்பிக்கிறார். 'என்ன தத்வத்தை அறிந்தால்?' என்று கேட்பீரோ? 'நிரவதிகதயம் த்வாம்'—வரதன் தயைக்கு எல்லையே யில்லை யென்கிற உண்மையை. இதை ப்ரத்யக்ஷம்போல் நிச்சயமாகக் கண்டு நிச்சங்கனாய் த்ருட விச்வாஸத்துடன் நெருங்குகிறார்.

ப்ராப்ய ஸம்ரக்ஷகம் த்வாம்—ஸம்ரக்ஷகனை, கோப்தாவாக, உம்மை ப்ரார்த்தித்து உம்மை அடைந்தது. வரதனை நாம் வரிப்பது உசிதமே; வரதன்

நம்மை வரிப்பதும் உசிதமே. வரண கர்மத்வமும் வரண கர்த்ருத்வமும் அவனிடம் ஸ்வரஸாந்விதம். 'த்வாம் ப்ரபத்யே'—உம்மை ஸேவித்துக் கொண்டே உம்முடைய பாத பத்மத்தில் எங்கள் பரத்தை ஸமர்ப்பித்தது. 'திருவடித் தாமரையில் சுமையை வைப்பரோ? நான் தான் ஒப்புவேனோ?' என்று கேட்பீரோ? நீர் வரதனென்று பிருதத் திருநாமத்தை அஸாதாரணமாக வஹிப்பவரல்லரோ? என்ன சுமையை வைத்தாலும் நீர் தடுக்கமாட்டீர்.

புருஷ:—என் பரத்தை உம்மிடம் ஸமர்ப்பித்து விட்டேன். என்னை ஆச்ரயிப்பவர் பரங்களை அவர்கள் இச்சைப்படி மற்ற எம்பெருமான்களிடம் ஸமர்ப்பிக்கலாம். சுமையும் அகன்றது; பயமும் அற்றது. உம்மை ஸேவித்துக் கொண்டு உம் திருவடிகளில் என் பரத்தை ஸமர்ப்பித்துவிட்டு நான் 'ஸுகீ' என்று சொல்லிக்கொள்ளும்படி உளனாகிறேன். 'ஸ்வாகஸ்' என்கிற ஆசார்யர்கள் அநுக்ரஹம் இப்பொழுது ஸித்திபெற்றது. 'ஸுகீ' என்று சொல்லிக் கொள்ள யோக்யனானேன்.

தர்க்கன்—[இதோ இங்கே கண் செலுத்தவேணுமென்று திருவேங்கட வெற்பையும் அதில் ப்ரவஹிக்கும் கங்கை போன்ற மலையருவிகளையும் காட்டுகிறார்.] இங்கே ஒருவர் எம்பெருமான் தயையை ஓயாமல் துதித்துக் கொண்டேயிருக்கிறாரென்று சொல்லிக் கொண்டு 'ஜய ஜய மஹாதயெ தயெ' என்கிற அறுபதாம் ச்லோகத்தைப் படிக்கிறார். இன்னும் ஒரு ச்லோகத்தையே ஆவர்த்தநம் செய்து கொண்டிருக்கிறாரென்று சொல்லிக் கொண்டு 'நிஷாதாநாம் நேதா' என்னும் ச்லோகத்தைப் படிக்கிறார்.

விவேகர்—முநிகள் ஸ்ம்ருதிகளில் கூறுகிறார்கள்.

" நிக்ருஹீதேந்த்ரியக்ராமோ யத்ர யத்ர வஸேந்நர: ।
தத்ர தத்ர குருக்ஷேத்ரம் நைமிஶம் புஷ்கராணி ச ॥

[காவலில் புலனை வைத்து இந்த்ரியங்களை யெல்லாம் அடக்கிய புருஷன் எங்கெங்கே வஸிப்பனோ, அங்கங்கே குருக்ஷேத்ரம் நைமிஶ க்ஷேத்ரம் புஷ்கராதி க்ஷேத்ரங்கள் சென்று க்ஷேத்ர வாஸம் செய்யும்] 'வஸேத்' என்பதை க்ஷேத்ரங்களோடும் 'வஸேயு:' என்று பஹுவசநமாக மாற்றிக்கொண்டு அந்வயிக்க வேணும். அவன் இருக்குமிடத்திற்கு க்ஷேத்ரங்களெல்லாம் ஓடிவந்து அவனோடு வஸிக்கும். அவன் எங்கேங்கே போகிறானோ, அங்கங்கே அவைகளும் பின் தொடர்ந்து வந்து அவனோடு வஸிக்கும் என்று ரஸம். 'தீர்த்தீகுர்வந்தி தீர்த்தாநி' என்பது போல. தர்க்கரே! இக்கலியின் ஆக்ரமத்தில் எங்கும் விக்நமற்ற நல்ல க்ஷேத்ரம் கிடைப்பது அரிதாயிருக்கிறது. தபஸ்ஸுக்கு வெளியிடம் தேடுவதில் பயனில்லை. உள்ளேயே இடம் தேடி அடைவதே உசிதம்.

"ஸாக்ஷஸ்ய ஸாராணஸ்ய ஸம்ஸாரஸ்ய ஶரணாயிதந: ।
ஸர்வரக்ஷையொரெகஸ்யரக்ஷ்யம் ஸ்யாநஶாஞ்சமே ॥ "

ஆதிபுருஷனை பகவானும் நம்மை விட்டுப் பிரிய ஸஹியாதவனாய், நாம் இருக்கும் இடமாகிய நம்முடைய ஹ்ருதயத்துக்குள் வந்து வஸிக்க இடம் தேடுகிறான். நாமும் அவனை விட்டுத் தனிப்பட்டு வஸிப்பது ஸாத்யமே இல்லை. அவனோடு நாம் அப்ருதக்ஸித்த ரென்னும் தத்வத்தை அறிந்தவராய், அவனோடு ஒரு க்ஷணமும் பிரியாமல் கூடியே யிருக்கும் ஓரிடத்தைத் தேடவேணும்.

இங்கே 'ஶரணம்' என்பதற்கு 'வாஸ க்ருஹம்' என்பது பொருள். அவனும் நம்மோடு கூடி வஸிக்க க்ருஹத்தை அபேக்ஷிக்கிறான்; நாமும் அப்படியே அபேக்ஷிக்கிறோம். பிரியாமல் கூடியிருக்கு மிடம், ஆந்தர ஸ்தாநமான உட்கோயிலாகிய நெஞ்சமேதான். அந்த உள்குஹையில்தான் பிரியாத வாஸம் ஸித்திக்கும்.

'புருஷன்' என்பதற்குப் 'புரங்களில் சயனித்திருப்பவன்' என்பது பொருள். 'ஸர்வ ப்ராணிகளின் ஹ்ருதய குஹைகளும் அவனுக்குப் புரங்கள்' என்ற ச்ருதிப்படி, ஹ்ருதய குஹை ப்ரஹ்மத்துக்கு வாஸபுரம். இந்த உள் கோயிலில் பிறர் ப்ரவேஶித்துத் தூஷிக்க முடியாது. அங்கு நித்யமும் ஏகாந்தமே. மூன்றாவது ஜநமில்லை. அவரவர்களுக்கு இது தனிக் கோயில்; ஒரே கோயில். பாஹ்யர் ப்ரவேஶிக்க முடியாது. இவ்வளவு பெருமைகளையுடைய உட்கோவிலை விட்டு, ஏன் வெளிக் கோவில்களை அபேக்ஷிக்கவேணும்? இதை நீ கவனிக்க வேணும்.

“ ஶாந்தாத்மாநஸ்தபோவநேஷு நிரதா: ப்ரஹ்மைகநிஷ்டா: ஶுசி:
ஸத்வாதாரமதஸ்ததாதிஹாலஸத் நீதிர்த்யாஸிதைகாஸநா: ।
கைவல்யம் ஸமுபாஸதே ஸ ததா ஸாத்விகதோஷ: ஸதாது
க்ஷணம் கதிரேதி ஸதாபதம் க்ஷணே ஸ நிதேவக்ஷ்யதி ॥ ”

ப்ரஹ்ம நிஷ்டரான பரமைகாந்திகள், ஏகாந்தத்தில் பரமாத்மாவையே ஆராமமாகக் கொண்டு பக்தியோகாநுஷ்டாநத்தில் நித்ய நிரதராயிருந்து நிரபேக்ஷராய் விளங்கும் நிலையின் பெருமையை மகிழ்ந்து பாடுகிறார்கள். பக்தியோகமென்னும் மாதவன் விஷயமான மா தவத்தை எந்தத் தபோவநத்தில் புரிவது? பயனை அடியோடு கருதாமல் பகவந் முகோல்லாஸமே தனக்கு இன்பமாகக் கர்த்ருத்வாதி த்யாகங்களோடு ச்ரத்தாமயராய்ப் புரியும் ஆஜ்ஞாநுஜ்ஞா கர்மாசரணமே தபோதந ஸஞ்சாரமாகக் கொண்டு அதிலேயே நிரதராயிருப்பர். இப்படி சுத்தமான ஆசரணம் தான் இவர்களுக்குத் தபோவந ஸஞ்சரணம். பயனை உத்தேசித்த கேவல கர்மாசரண மல்ல. 'க்ரியாவந்த: ஶ்ரோத்ரியா: ப்ரஹ்மநிஷ்டா:' 'க்ரியாவாநேஷ ப்ரஹ்மவிதாம் வரிஷ்ட:' என்று ச்ருதி புகழ்ந்த ஆசார சீல ப்ரஹ்ம நிஷ்டர்.

“ ப்ரஹ்ம ப்ரஸாதசாந்தஹ்ய ஶோபாத்ய: ஶோபதே ஜநாநு ।
ஹரிதிஷா நிவ ஶௌர்யேண த்ரஷ்டா ப்ரஹ்மஜ்ஞாநஶோபதி ॥ ”

என்னும் வசநத்தி லுள்ளபடி ப்ரஜ்ஞாந மென்னும் உந்நத மலையில் ஆரூடராய் அங்கே சுத்தாசார தபோவந ஸஞ்சாரம் செய்கிறார். இவர் ப்ரஹ்ம த்யாநத் திலேயே முழுகியிருக்கையில் இவருக்கு அந்த பக்தி ப்ரவாஹ நிரந்தராபிஜ்ஞா நத்தால் இவர் திருமேனி ப்ரஹ்ம காந்தியால் உஜ்வலமா யிருக்கிறது. இவரது பக்தி யென்னும் ராகம் பத்மாகாந்தனுடைய திருவடியை நோக்கி, இவர் நெஞ்சிலிருந்து ப்ரவஹித்துக் கங்கையைப்போல் ஸ்வச்ச ஸ்வாது ஸதாவதாத ஸ்வரூபகமாய் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்தக் கங்கையில் இவர் ஸர்வ கால மும் முழுகினவண்ணமாகவே இருந்துவருகிறார். இந்த கங்கா ப்ரவாஹத்துக்கு ஒரு விசேஷ முண்டு. பகவான் திருவடியிலிருந்து கிளம்பி வெளியே ஓடிவிழும் கங்கையல்ல; அவர் திருவடியை நோக்கி ப்ரஜ்ஞாந சைலத்தின் உச்சியிலுள்ள இவர் ஹ்ருதயத்திலிருந்து சுழிபட்டோடும் கங்கை யென்று ரஸம். அத்யாத்ம ச்ருதி யென்பது ஜீவ பரமாத்ம ஸம்பந்த ஸ்வரூபாதிகளைக் கண்ணாடியில் போல் காட்டும் உபநிஷத்துக்கள் ப்ரணவம் திருவஷ்டாக்ஷரம் முதலியன. அந்த ச்ருதிகளை மநநம் செய்யும் ஆலோசந ரூபமான தபஸ். இந்த ச்ருதி சிந்தநத் தால் ஸகல தோஷங்களும் பறந்து போகின்றன. இப்படி ஆத்ம ரதியாய், ஆத்ம மிதுநராய், ஆத்ம த்ருப்தனுயுள்ள ஸ்தித ப்ரஜ்ஞன், எந்த ப்ரயோஜநத் தைக் கோரி யாரிடம் செல்வன்? ஆத்மநைவ மனம் துஷ்டனாய் இன்பவெள் ளத்தில் ஆழ்ந்திருப்பவருக்கு ஆகவேண்டிய கார்யம் என்ன இருக்கிறது? '[illegible]' என்று உபநிஷத் புகலும் அதிகாரி. வெளியே ஒருவரிடம் செல்லவேண்டாம். இங்கே இவர் இருக்குமிடம் தேடி வருபவரிடமும் தன்னுடைய மஹிமையை ப்ரகாசமாகச் சொல்லிக்கொள் வரோ? அதுவும் செய்யார். தன் மஹிமையை ஆவிஷ்கரணம் செய்யமாட் டார்.

" [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ "

திவ்ய க்ஷேத்ரங்களைத் தேடினார். ப்ரஹ்மபுர மென்னும் ஹ்ருதய புண்ட ரீக வேச்மத்தில் கோயில்கொண்ட லக்ஷ்மீ வித்யுல்லேகையோடு ஜ்வலிக்கும் காளமேகத்தையே ஓயாமல் பூஜிக்கத் தீர்மானித்தார். யாதொரு தீர்த்தங்க ளுக்கும் யாத்ரை செய்யவேண்டாம்.

" [illegible] ।
[illegible] ॥ "

என்று பீஷ்மர் அநுபவித்ததுபோல பகவத்குணாம்ருத ப்ரவாஹம் நம்மைச் சூழ்ந்து நித்யமாய் ஓடிக்கொண்டிருக்கையில், அதிலே அவகாஹித்து ஆத்மா வின் அநாதி துஸ்ஸஹ தாபங்களைப் போக்கி மனங் குளிரவேணு மென்கிறார். புண்ய நதிகளைக் குறிக்கையில் கங்கையில் தொடங்கி காவிரியைக் கடைசியில்

கூறுகிறார். வடக்கே ஹிமாலயத்திலிருந்து வந்த மார்க்கத்திலுள்ள நதிகளைக் குறிக்கிறார். கங்கை, ஸரஸ்வதி, யமுனை என்ற த்ரிவேணி ஸங்கமத்தை முதலில் குறிக்கிறார். 'ஊ௨ஜெ௯ஂமெயஉ-ூெநு ஸாகஸ தீ' என்ற ச்ருதியையும் நினைக்கிறார். இந்த நதிகளைக் கூறுகையில், பதியாகிய ஸாகரத்தையும் கூடச் சேர்த்துப் படிப்பது உசிதம். கங்கையின் பதியாகிய ஸாகரத்தில் ரகுவீர பதந்யாஸ பவித்ரமான ஸேதுவைக் குறிப்பதால், நதிகளின் பதியையும் சேர்த்துக் குறித்ததாகிறது. ஸேதுவென்னும் அணையில் ஸ்நாநம் செய்வதில்லை; அதற்கு அருகேயுள்ள ஸமுத்ரத்தில்தான். ஸேதுவைக் குறித்ததால், ஸமுத்ரமாகிய அபாம்பதியைக் குறித்ததாகிறது. கங்கைக்கும் ஸேதுவுக்கும் திருவடி ஸம்பந்தம் அதிகம். தூரத்திலுள்ள இந்தத் தீர்த்தங்களுக்கு என் கஷ்டப்பட்டுச் செல்ல வேணும்? ப்ரம்ஹமென்னும் மடுவு நம்மை ஸர்வ காலமும் எப்பொழுதும் சுற்றிலும் சூழ்ந்தேயிருக்கிறது. அதற்குள்ளேயே ஸர்வகாலமும் நம்முடைய வாஸம். அந்தத் தத்வத்தை நாம் உணர்ந்தால், அதன் அன்பை அறிந்து நாமும் ப்ரீதிவைத்தால், அது நமக்குப் பயன்படும்.

"சுஹிதொ ப்ரஹ்மநிவஷாணம் வதஉதெ விஜிதாகநாழ ।"

இந்த்ரியம் வசமாயுள்ளவர்க்கு எப்புறமும் ப்ரஹ்மாநந்த வெள்ளம் சூழ்ந்கொண்டேயிருக்கும். 'ஸுணநம் சுவிஜிதொ நஹூநக்தி' என்றபடி அவன் உள்ளும் புறமும் எப்பொழுதும் பரவியிருந்தாலும், நம்மால் அறியப்படாமல் அவன் இன்பரஸம் அளிப்பதில்லை. இந்த ப்ரஹ்ம ரஸவெள்ளம் ஸர்வ காலமும் நம் அருகிலேயே நமக்குள்ளேயே இருக்கிறது. மற்ற புண்யநதிகள் எல்லாத் தாபங்களையும் போக்கவல்ல தல்ல; இது அஶேஷ தாபஶமநம் செய்வது. அந்நதிகள் மோக்ஷம் தரமாட்டா; இது மோக்ஷம் தரும். க்ரீஷ்ம காலத்தில் குளிர்ந்த மடுவில் அவகாஹிப்பதுபோலவும், பெருவிடாயர் மடுவிலே விழுமாப் போலவும் காம க்ரோதாதிகளான தீயில் வெந்து தவிப்பவர், அத்தாபமெல்லாம் தீர இந்த ப்ரஹ்மநதியில் குள்ளக் குளிரக் குடைந்து நீராடி ஶாச்வதமாய் இன்புறலாம். ப்ரபோத சந்த்ரோதயத்தில், புருஷனுக்கு ஸரஸ்வதி உபதேஶம் செய்யும் அடியிற் கண்ட ச்லோகத்தை நினைத்தே இந்த ச்லோகம் ஸ்வாமியால் பாடப்பட்டது திண்ணம்.

"நிதஂ ஸூாநு ஜஸூ நீஷு உூாஸஹாஸ
கெயூஸகூணூ கிஸீடயஸஂ ஹஸிஂ வா ।
ஸ்ரீ ஷெ ஸூஶீதவிவ வா ஹ உஷூஶொகஂ
ஜஹ வ்விஶ ஹஜநிவூஷதிஉதீ நழ ॥"

'மேக ச்யாமமாய்' திருமார்பில் சந்த்ரி கோதாரமான ஹாரமும், திருத் தோள்களில் கேயூரங்களும், திருச்செவிகளில் குண்டலங்களும், திருமுடியில் கிரீடமும் மின்னும் ஹரியை ஓயாமல் பஜநம் செய்வாயாக. அல்லது, ஸகல ஶோகங்களையும் தவிர்க்கும் ப்ரஹ்மத்துக்குள், கோடையில் குளிர்ந்த மடுவில் ஆழ்ந்து முழுகி வெப்பம் நீங்கிக் குளிர்ந்து மகிழ்ந்து போல், அவகாஹித்து ஆழ்ந்து ஆத்மாவுக்கு ஹிதமான பேரின்ப ஸுகத்தை அடைவாயாக.

அங்கு ஸ்ரீ க்ருஷ்ணமிச்ரர், ஓயாமல் விஷ்ணுவை த்யாநம் செய்; அல்லது நிர்க்குண ப்ரஹ்மததில் மூழ்கி இன்புறு' என்று ஸகுண நிர்க்குண ப்ரஹ்ம பேதத்தை நினைத்தார். அந்த பேதமில்லை; ஸகுண ப்ரஹ்மத்தினுள் ஆழ்ந்து நீராடுவதைத்தான்.

“ ஸைஷ ஸூஹ ஸூவிஷ்டோஸீ ஸீ ஷை ஸீதவ ஹூதை ।”

என்று பீஷ்மர் முதலியோர் பாடினார்களென்று விளக்குகிறார்.

இனி நாம் சுபாச்ரய மின்னதென்று பராமர்ஶித்துத் தீர்மாநம் செய்து, அதில் புருஷன் தாரணா த்யாந ஸமாதிகளைச் செய்வதற்கு ஸம்விதாநம் செய்வோம்.

[ஆறும் அங்கம் முற்றிற்று.]

ஸ்ரீ:

இரு ஸாதுக்கள்

[ஸ்ரீ. உப. காளி வரதாசார்யர், கும்பகோணம்.]

“ஐயோ! இங்கே எப்படி வஸிக்க முடிகிறது? பாபமும் கொடுமையும் தாமஸ குண விகாஸமும் வீறு கொண்டெழும் இப்பிரதேசத்தில், ஸத்வ குண ப்ரதாநரான உமக்கு இருப்புத்தான் கொள்ளுமோ?”

“பற்கள் நடுவில் தானே நாக்குக்கு வாழ்க்கை! அதுதான் வாழ்வு. ராமநாமம் ஜபிக்க இருக்கும் வரையில் இருக்கும் இடம் எதுவானால் என்ன? ராம நாம ப்ரபாவம்தான் இன்று எனக்குத் தமது தர்சநம் கிட்டினது.”

“ராமநாம ப்ரபாவத்தால்தான் எனக்கும் இந்த பாக்யம் கிடைத்தது. காலையில் எழுந்து என் முகத்தில் விழித்தாலும் பெயரைச் சொன்னாலும் நாள் முழுவதும் போஜநமும் கிடைப்பதில்லை என்று ப்ரஸித்தம். நீசக் குரங்கான என்னையும் ஆட்கொண்டாரே அருளாளன்!”

“பாகவதோத்தமர் தாம்! நாமத்தை நினைத்த மாத்ரத்தில் தம் உடல் புல்லரிக்கிறது; நேத்ரம் அருவியாகிறது. அந்தப் பகவான் என்னையும் ஆட்கொள்ளுவாரா? இந்த ஜனங்கள் அவரது புநித நாமத்தைச் சொல்லத் தெரியாமல் வீணுகின்றனரே. இவர்களிடையே ஸீதாதேவி சடைமுடியும் ஸதா ராம ஜபமுமாக காலம் கடத்துகிறாள்.”

“தாயைத் தேடியே வந்தேன். தங்கள் தர்ஶநமும் கிடைத்தது. தங்யன் நான். விடையளியுங்கள்” என்று ஹநுமான் விபீஷணரிடம் சொல்லிக் கொண்டு அசோக வநத்துக்குள் ப்ரவேசித்தார். இவ்வாறு ஸ்ரீ துளஸீதாஸ் ராமாயணத்தில் காணப்படுகிறது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

குரவர் குறள்

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரே. திருமலை அய்யங்கார், தமிழ் வித்வான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.]

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமி லின்பத் தழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்கு உரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரால் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை: அறம், பொருள், இன்பம், வீடு என்பன. இவற்றை வடநூலார் முறையே தருமம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்பர். இவற்றுள் வீடு என்ற புருஷார்த்தம் மிகச் சிறந்தது என்பது வைதிக ஸித்தாந்த ப்ரவர்த்தகர்களான ஆசார்யர்களால் அபிப்ராய பேதமின்றி ஒரே மாதிரியாய் அங்கீகரிக்கப்பட்ட விஷயம். அந்த மோக்ஷத்தைப் பெற விரும்புகின்றவன் முமுக்ஷு. அவன் முதன் முதலில் ஞானத்தை ஸம்பாதிக்கவேண்டும். 'ஜ்ஞாநாந் மோக்ஷலாப:' என்பது ப்ரமாணம். ச்ரிய:பதியான எம்பெருமான் திருவடிகளில் பரமப்ரீதியுடன் செய்யும் கைங்கர்யமே மோக்ஷம் என்றும், பரமபுருஷார்த்தம் என்றும், அதற்கு ஸாதநம் பக்தி ப்ரபத்திகள் என்றும் நம் ஆசார்யர்கள் விளக்கிப் போந்தனர். மோக்ஷ ஸாதநமாகச் சொல்லப்படுகிற ஜ்ஞாநம் தத்வ நிர்ணய ஸாபேக்ஷம். எனவே அதனை உணர்தல் அத்யாவச்யகம். "ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளையே உபாயமாகவும் உபேயமாகவும் பற்றுமவனுக்கு முற்பட ப்ரக்ருத்யாத்ம ப்ரமாதிகள் கழியும்படி தத்வத்ரயத்தை விவேகிக்கவேண்டும்" (தத்வத்ரய சுளகம்) என்பது மறைமுடித் தேசிகனார் மறைமொழி. ஆதலின் 'தத்வநிர்ணயம்' என்ற விஷயம் முந்துற முன்னம் அறியப்படல் வேண்டும் என்பது கூறாமலே விளங்கும்.

'தத்வம்' என்பது உண்மையான பொருள் என்னும் பொருள் உடையது. உண்மைப் பொருளை உணர்வதற்குச் சாதநம் ப்ரமாணம். அந்த ப்ரமாணம் ப்ரத்யக்ஷம், அநுமாநம், சப்தம் என மூவகைப்படும். அவற்றுள், ப்ரத்யக்ஷ ப்ரமாணமாவது:—ரூப ரஸ கந்த ஸ்பர்ச சப்தங்களையும் இவற்றிற்கு ஆதாரமான த்ரவ்யங்களான ஸுகதுக்கங்களையும் அறிவதற்கு ஸாதநங்களான கண் முதலான ஐந்து இந்த்ரியங்களும் மநஸ்ஸுமாகிற ஆறு இந்த்ரியங்களும் ஆம். அநுமாந ப்ரமாணமாவது:-ப்ரத்யக்ஷத்தால் அறியப்படும் வஸ்துக்களுடைய ஒன்றை விட்டு ஒன்று பிரியாமலிருக்கிற நிலைமையைக்கொண்டு ஒன்றாலே ஒன்றை அறிகைக் குறுப்பான தர்க்கம் என்று சொல்லப்பெறுகிற யுக்திவிசேஷம். [அறியப்பட்ட தொன்றை விட்டுப் பிரிந்திருக்க மாட்டாதது என்று அறிந்த தொன்றை அறியாதவிடத்தும் அவ்வறியப்பட்டதைக் கொண்டு அறியும் யுக்திவிசேஷம் என்றபடி.] சப்த ப்ரமாணமாவது-ப்ரத்யக்ஷம் முதலான மற்ற ப்ரமாணங்களால் அறியமுடியாத பொருள்களை உள்ளபடி அறிகைக்கு ஸாதநமான அக்ஷரராசி

ரூபமான சப்தம். அந்த சப்தம் நான்கு வகையுள்ள வேதங்களும், அவற்றின் அர்த்தங்களை விசதமாகத் தெரிவிக்கும் ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களும், மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களின் அருளிச் செயல்களுமாம். அவற்றில் வேதம் அபௌருஷேய மாதலால், அது சிறந்த ப்ரமாணம் என்று ஆஸ்திகர்கள் அனைவராலும் அங்கீகரிக்கப் பெற்றிருக்கிறது இதையே திருவாய்மொழி [9-3-3]

"அறிந்தன வேத வரும்பொருள் நூல்கள்
அறிந்தன கொள்க அரும்பொரு ளாதல்
அறிந்தன ரெல்லாம் அரியை வணங்கி
அறிந்தனர் நோய்க ளறுக்கு மருந்தே"

என்றோதுகிறது. அந்த வேதத்தில் உத்தர பாகம் என்று சொல்லப்பெறுகிற உபநிஷத்துக்களே தத்வ நிர்ணய விஷயத்தில் சிறந்த ஆதாரமாக இருக்கின்றன.

தத்வம் என்று சொல்லப்படும் உண்மையான பொருள் மூன்று. அவை: சித், அசித், ஈச்வரன் என்று சொல்லப்பெறுகின்றன. "போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா" என்று உபநிஷத் வாக்யம் ஒன்று உளது. இது மூன்று தத்வங்களின் ஸ்வபாவத்தை வெளியிடுகின்றது. ஜீவனை அநுபவிப்பவனாக வும், அசேதநத்தை அநுபவிக்கப்படும் வஸ்துவாகவும், ஈசுவரனைச் சேதநாசேத நங்களை ஏவுபவனாகவும் இவ்வாக்யத்தால் அறிகின்றோம். [போக்தா-அநுபவிப் பவன்; போக்யம்-அநுபவிக்கப்படும் வஸ்து; ப்ரேரிதா-ஏவுபவன்] "ஸம்ஸ்க்ருத த்ராவிட ச்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களிற் சொல்லுகிற தத்வஜ்ஞாந பூர்வகமாக மோக்ஷோபாயாநுஷ்டாநம் வேண்டுகையாலே முமுக்ஷுவுக்கு விசே ஷித்து அறியவேண்டும் சிதசிதீச்வர தத்வங்களைப் போக்தா வென்றும், போக் யம் என்றும், ப்ரேரிதா என்றும் உபநிஷத்து சொல்லிற்று. போக்தா வாகை யாவது—போக்யத்தை உடையனாகை இது ஸர்வேச்வரனுக்கும் பொதுவா யிருக்க, அவனை ப்ரேரிதா என்று பிரியச் சொல்லுகையாலே, ஸர்வ ப்ரேரகத்வ மன்றிக்கே பராதீந போகனான ஜீவனை யிங்கு போக்தா என்கிறது. சிதசிதீச்வ ரர்கள் என்னும்போது 'சித்' சப்தமும் பராதீந சேதந விஷயம். போக்யம் என் றது அநுபாவ்யம் என்றபடி. இது ஜீவேச்வரர்களுக்கும் பொதுவாகையாலே பூர்வாபர பதங்களிற் சொன்ன போக்த்ருவத்வமும் நியந்த்ருத்வமும் இல்லாத விஷயத்தை இங்கு போக்யம் என்கிறது. இத்தை அசித் தென்றது ஜ்ஞாந ரஹிதம் என்றபடி." அறிவுள்ள ஜீவாத்மா சேதநன். இவனுக்கு ஜ்ஞாநம் ஒரு குணமாய் நிற்கும். இந்த ஜ்ஞாநம் தர்ம பூத ஜ்ஞாநம் எனப்படும். ஜீவ ஸ்வரூபமும் ஜ்ஞாந மயமே. எனவே ஜீவன் தர்மி பூத ஜ்ஞாநம் எனப்படு வான். ஜீவன் அணுவாகவும் ஆநந்த ஸ்வரூபமாகவும் நிற்பவன்; சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டவன்; அழிவற்றவன்; பகவானுக்கு அடியனாகவே நிற் பவன். இத்தகைய ஜீவாத்மாக்கள் எண்ணற்றவர். அவர்கள் பத்தர், முக்தர், நித்யர் என மூவகையினர். பீஜாங்குர க்ரமத்தாலே அநாதியான அபராத ப்ரவாஹம் அடியாக முடிவில் பெரும்பாழான சிறைக் கூடத்திலே முப்பிரியான

20 AUG 1947

ஸத்வாதி குணங்களாலே கட்டுண்டு கழல விரகற்றுக் கிடக்கிறவர்கள் பத்தர்கள். இவர்களிலே மோக்ஷ சாஸ்த்ரங்களிற் சொல்லுகிறதொரு விரகாலே 'மோக்ஷயிஷ்யாமி' என்னும்படி முனிவுதீர்ந்து நித்யரோடு ஒக்க முகப்பே கூவிப் பணிகொள்ளப்பெற்றவர்கள் முக்தர்கள். நித்ய பகவதநுபவத்தாலே நித்ய கைங்கர்யபரரான அநந்த கருட விஷ்வக்ஸேநாதியர் நித்யர்கள். அறிவில்லாத வஸ்து அசேதநம். அசேதநத்தால் கிடைக்கக் கூடிய பலனை அநுபவிப்பவன் சேதநனே. இந்த அசேதநம் த்ரிகுணம், காலம், சுத்த ஸத்வம் என மூவகைப்படும். இப்படி மூன்று வகையான சேதநா சேதநங்களுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகள் மூன்றும் தானிட்ட வழக்காம்படி நிற்கிற ச்ரிய: பதியை ப்ரேரிதா வென்கிறது. இவன் மூன்று ஸம்பந்த நியமத்தாலே ஸர்வ சரீரியாய், மூன்று வ்யாபார விசேஷங்களாலே ஸர்வ கார்யங்களுக்கும் ஸர்வ காரணமாய், மூன்று காலத்திலும் ஏக ரூப ஸ்வரூபங்களை யுடையவனாய், மூன்று ஸ்தாநத்திலே நித்யவாஸத்தை யுடையவனாய், மூன்று வகையான அர்ச்சாவதாரத்தை உடையனாய், மூன்று யுகத்திலே விசேஷித்து ப்ரகாசிக்குமவனாய், மூன்று குண யுகத்தாலும் த்ரியுகனாய், மூன்று வ்யூஹங்களாலே மூவிரண்டு ப்ரகாரங்களைப் பண்ணுமவனாய், மூன்று புருஷார்த்தங்களுக்கும் மூலமாய், மூன்று ப்ரமாணங்களாலும் ப்ரதிஷேத மில்லாதவனாய், மூன்று மாத்ரையான ஒற்றை எழுத்துக்கு முக்யார்த்தமாய், மூன்று ரஹஸ்யங்களில் சிக்ஷையாலே விசேஷித்து அறியப்படும். ப்ரஹ்மத்துக்கு உபநிஷத்துக்களிற் சொன்ன த்ரைவித்யம் போக்த்ருத்வ விசிஷ்ட ரூபத்தாலும், போக்யத்வ விசிஷ்ட ரூபத்தாலும், ப்ரேரகத்வ விசிஷ்ட ரூபத்தாலும் உபபந்நம். தன்னையும் ப்ரேரிதாவையும் பிரிய அறிந்து பற்றினவனுக்கு அவன் ப்ரஸாதத்தாலே மோக்ஷம் என்று இங்கே ஓதுகிறது. [தொடரும்]

உத்தர பூமியிலே லோகஸாரங்க மஹாமுனிகள் வர்த்தியாநிற்க, இங்குத்தையானொருவன் அங்கேறச் செல்ல, "பிள்ளாய்! தக்ஷிண பூமியில் விசேஷமென்?" என்று கேட்க, "திருவாய்மொழியென்றொரு ப்ரபந்தம் அவதரித்தது, ஶிஷ்டர்கள் பரிக்ரஹித்துப் போரக் கொண்டாடிக் கொடுபோகா நின்றார்கள்" என்ன, "அதிலே உனக்குப் போவதொரு சந்தை சொல்லிக் காணாய்" என்ன, 'ஆராவமுதே! என்கிற வித்தனையும் எனக்குப்போம்'! என்ன, "நாராயணாதி நாமங்கள் கிடக்க, இங்ஙனேயு மொரு திருநாமமுண்டாவதே!" என்று அத்ருப்தராய், "இச்சொல்லு நடையாடுகிற தேசத்தேறப் போவோம்" என்று அப்போதே புறப்பட்டுப் போந்தார்......... இத்திருவாய்மொழியில் இவர்க்குண்டான ஆற்றாமைக் கெல்லாம் பீஜம் இப்பத மாயிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ மதமும் ஜாதியும்

[ஸ்ரீ உப. மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, வித்வான், திருவையாறு]

பகவத் பக்தியினால் துர்ஜாதி நீங்கி உத்க்ருஷ்ட ஜாதி ஏற்படுகிற தென்றும், அந்த உத்க்ருஷ்ட ஜாதியும் விலகி ஸாம்ய முண்டாகிற தென்றும் ப்ரமாணங்கள் கூறுகின்றன. இது விஷயத்தில் நமது ஸம்ப்ரதாயாசார்ய க்ரந்தங்களில் ஸ்வல்ப அபிப்ராயபேத மிருந்துவருவதும் ஸுப்ரஸித்தம். இந்நிலையை உபயோகித்துக்கொண்டு தத்காலம் சீர்திருத்த வாதிகளான சிலர், ஸ்ரீவைஷ்ணவ மதத்தின் சார்பில் நின்றுகொண்டே, வைதிகர் மனம் புண்படும்படி ப்ரசாரங்களும் வ்யாபாரங்களும் செய்துவருகிறார்கள். இது விஷயமாக நமக்குள்ள ஐகமத்யத்தை ஸ்ரீ. உப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி வெகு தெளிவாகப் பல க்ரந்தங்களில் எழுதி ப்ரசுரம் செய்வித்திருப்பது, உபய ஸம்ப்ரதாயத்தாராலும் போற்றத்தக்க தாகிறது. முக்யமாக இரண்டு க்ரந்தங்களை மட்டில் நிதர்சநமாக இங்கு விளக்குவோம். தென்னாசார்ய ஸம்ப்ரதாயம் என்பதாக அவர் ப்ரசுரம் செய்துள்ள ஒரு க்ரந்த முண்டு. அதில் ஜாதியின் விநாச நிரூபணம் என்கிற பகுதியில் அவர் எழுதியிருப்பதாவது:—'இக்காலத்தில் இதர வர்ணத்தவர்கள் யோக்யதை மிகுந்தவர்களா யிருந்தாலும், அவர்கள் திறத்திலே நாம் எங்ஙனம் நடந்துகொள்ளுகிறோ மென்பது அனைவர்க்கும் அபரோக்ஷம். இவ்வர்த்த விசேஷங்களைச் சேமிக்கின்ற நாமும் இவற்றை க்ஷேபிக்கின்ற பிறரும், நடத்தையில் ஒரு வாசியின்றிக்கே யிருப்பது ப்ரத்யக்ஷ ஸித்தம்........' 'அம்ருதலஹரி' என்னும் பத்ரிகையிலும் 'தீண்டாமை தொலையாமை' என்கிற மகுடத்தின் கீழ் விரிவாக இவ்விஷயத்தையே நிலைநாட்டியுள்ளார். அதாவது:— பகவானிடத்தில் பக்தியுள்ளவர்களுக்குப் பெருமை உண்டென்பது யாவரும் இசைந்ததே. இதற்கும் ஜாதிக்கும் யாதொரு ஸம்பந்தமும் இல்லை என்பதாகவும், "ஜாதிபேத பாவனை கூடாதென்கிற பேச்சு சாஸ்த்ரங்களிலு முண்டு; சாஸ்த்ர வித்துக்களான மஹான்களின் வாக்குகளிலு முண்டு; ஆனால் தாத்பர்யம் வாசியிட்டிருக்கும்......இதைக்கொண்டு வர்ணாச்ரம வ்யவஸ்தைகளைக் குலைக்க நினைப்பது உந்மத்த க்ருத்யமேயாகும்." தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தில் விசேஷமான ஆர்வமும் ஆராய்ச்சியும் பெற்றுள்ள இந்த ஸ்வாமியின் வ்யாஸங்களை ஸ்ரீ வசநபூஷணம் முதலிய பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளின் ப்ரதிபலநங்களென்றே கொள்ளவேண்டு மன்றோ? இதை ஒருவரும் மறுக்ககில்லார்.

இந்த ஸ்வாமி, நவீந க்ஷேப நிரஸநத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் குறிப்பிடுவதாவது:— "தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தில் ஜாதி நசிக்குமென்று சொல்லுகையாலே, இவர்கள் ஜாதி வ்யவஸ்தை யின்றிக்கே ஜாதிவரம்பை யழிக்கைகயிலே ஊக்கமுடையவர்களென்றும், தீண்டாதாருடைய ஆலய ப்ரவேசக்

கிளர்ச்சி முதலான ஆபத்துக்களுக்குத் தென்ஞசார்ய ஸம்ப்ரதாயம் இடமளிக்கிற தென்றும் நவீநர்கள் சொல்லிப்போருவ துண்டு. ....ஆக இத்தால், தென்ஞசார்யர்கள் ஜாதி விநாச நிரூபணம் செய்யு மதனல் வர்ஞச்ரம தர்ம வ்யவஸ்தாஹாநி யொன்றுமில்லை" என்று இத்யாதியாக ஐயமற வெட்டெனக் காட்டியிருப்பது உபய ஸம்ப்ரதாயஸ்தரும் ஆதரிக்கத்தக்கதாக வுள்ளதே. ஸ்வாமி தேசிகனும் ப்ரபாவ வ்யவஸ்தாதிகாரத்திலே—

"ஃதொ ஜாதெ நி-ஃரூஷாயா ஸ்வஃ ஸூாவா வி நாஶ தஃ ।
ஸாஜாத்யம் விஷ-ஃ ஹக்ஷ நா ஶிதி ஏஃ ஶிஃ வஃ ॥"

என்று அருளியிருப்பதும் இங்கே அநுஸந்தேயம்.

'பகவத் பக்தர்கள் சூத்ரரன்று; ப்ராஹ்மணர்களே. பகவத் பக்தி யில்லாதார் எவ்வர்ணத்தவரே யாகிலும் சூத்ரரேயாவர்' என்கிறது ப்ரமாணம். இதன் கருத்து யாதாயிருக்கவேணு மென்பதை நம்மவர்களும் சீர்திருத்தக்காரரும் கவனிக்கவேண்டும்.

உபநிஷத்துக்களில் ஜநகர் அச்வபதி அஜாதஶத்ரு முதலிய ராஜர்ஷிகளைப் பற்றிய விபுலமான ஆக்யாயிகைக ளுண்டு. இவாகள் மஹா ப்ரஹ்மவித்க்ரேஸரர்கள். அச்வபதியிடம் மஹா ச்ரோத்ரியர்களான ப்ராசீநசாலர் முதலிய ப்ராஹ்மணோத்தமர் வைச்வாநர வித்யையை அதிகரித்ததாகவும், அஜாத சத்ருவிடம் பாலாகி என்கிற ச்ரோத்ரிய விப்ரச்ரேஷ்டர் ப்ரஹ்ம வித்யையைப் பெற்றதாகவு முள்ளது. ப்ரவாஹணர் என்கிற ராஜர்ஷியிடம் கௌதமர் பஞ்சாக்நி வித்யைப் பெற்றுள்ளார். ப்ரஹ்மவித்க்ரேஸர்களா யிருக்கச்செய்தே ஜநகர் முதலியோர் க்ஷத்ரிய ஜாதியைச் சேர்ந்தவர்களாகவே உபநிஷத்துக்களி லுள்ளது. பகவத் பக்தியினல் ப்ராஹ்மணர்களாகிவிட்டதாகச் சொல்லவில்லை. 'ஸ ஹ ஶௌ தஶொ ராஜ்ஞோஃயஃமெயாய' என்றும், 'தவெவ ராஜ நா நஃஷம் விதூ' என்றும், 'ஸவெஃஷஃ அநொகெஷஃ தவைஸுவஃ வுஶாஸநஃ ஏஹஃகி' என்றும் பஞ்சாக்நி வித்யா ப்ரகரணத்தி லுள்ளது. கௌதமர் என்பவர் ப்ரவஹாணர் என்கிற அரசனிடத்திற்குச் சென்ருர் என்பதும், 'ஓ அரசனே' என்று அவர் சொல்வதும், இவ்வித்யையானது க்ஷத்ரியஜாதி யொன்றுக்கே உரித்தா யிருந்துள்ளது என்று அரசன் சொல்வதும், ப்ரஹ்மவித்துக்களுக்கும் அதனல் ஸ்வஜாதி கடந்து ப்ராஹ்மண்யம் ஏற்பட்டுவிடமாட்டாது என்பதைக் காட்டுகிறது. அச்வபதி என்கிற ராஜர்ஷியானவர் ப்ராசீநசாலர் முதலியவர்களை ['ஃநஃவ நீயெதஃவாஃ'] தான் க்ஷத்ரிய ஞகையாலே உபநயநம் செய்விக்காமலே சொன்ஞர் என்றதனல், ஸ்வஜாதி நியமத்தைக் கடந்தாரில்லை என்பதை த்ருடீகரிக்கின்றது. பாலாகியைப்பற்றி அஜாதஶத்ரு சொல்வது மிகவும் முக்யமானது:—

'ஸஹொவாஃஜாதஶத்ருஃ:— வதிஶொஃம் வெவ தஃ
ஹ்ராஹ்மணஃ க்ஷத்ரியஃவெயாக ஃஹ்ஹெவக்ஷ்ஃதீதி;
யெநதஃஃ ஜ்ஞாவயிஷ்யாமிதி ।'

'ஆசார்யகத்திற்கு அதிக்ருதனன ப்ராஹ்மணன், க்ஷத்ரியனை ப்ரஹ்மோபதேசம் பெறுதற்காக ஶிஷ்ய வ்ருத்தியால் ஆச்ரயிப்பது ஆசாரவிதாயக சாஸ்த்ரத்திற்குத் தகாது. ஆகவே அதன்றியேதான் ப்ரஹ்மத்தைப் போதிக்கிறேன்' என்கிறார் அஜாதஶத்ரு. ஜநகர் க்ஷத்ரியரே என்பதும் உபநிஷத்திலும் ஸ்ரீராமாயணாதிகளிலும் ப்ரஸித்தம். இப்படி பக்தாக்ரேஸரரா யிருக்கச்செய்தே, க்ஷத்ரிய ஜாதியைச் சேர்ந்தவர்களாகவே ஜநகாதிகளிருந்தார்க ளென்றும், அவர்கள் ப்ராஹ்மண ஜாதியைப் பெறவில்லை என்றும் தெளிவாகின்றமையால், ப்ரதிபத்தி விசேஷங்களைப் பற்றவே உத்க்ருஷ்டர்பக்கல் அபக்ருஷ்ட சப்தமும் அபக்ருஷ்டர் பக்கல் உத்க்ருஷ்ட சப்தமும் ப்ரயோகித்தார்க ளென்று தெளிவாகின்றது. பகவத் பக்த ரெல்லோரும் ஒக்க உத்க்ருஷ்ட ஜாதியைப் பெறுவதானல், பக்தியில்லாதவர் எவ்வர்ணத்தவராகிலும் நிக்ருஷ்ட ஜாதியை அடைவதாகவு மிசைய வேண்டுமே. அதே வசநத்தின் பிற்பகுதியில் அப்படியே யன்றோ சொல்லியிருக்கிறது? முற்பகுதியைக் கொண்டு க்ஷேபம் விளைக்குமவர்கள் பிற்பகுதியையும் உற்று நோக்குவதே போதுமானது. க்ஷேபம் சாந்தமாகும். விசேஷ பக்தியாலே ப்ராஹ்மண ணவதாகில், விசேஷபக்தியில்லாமையாலே சூத்ராதிகளாகவும் ப்ரஸங்கிக்குமே.

'குலந்தரும்' என்கிற பாட்டிற்கு வ்யாக்யாநம் செய்தருளு மிடத்தில், 'ஜந்மத்தால் குறைந்தா னொருத்தனுக்குப் பகவத் ஸம்பந்த முண்டானாலும் அவர்களோடு பெண்கொடுத்துக் கொள்ளுகிறதில்லையே யென்னில், அது ஜாதி நிபந்தநம் ச்லாகைக் குண நிபந்தநம்' என்பதாக ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை பணித்திருப்பது அவச்யாநுஸந்தேயமானது.

'வீடுமின் முற்றவும்' என்கிற பாசுரத்தின் ஈடு முப்பத்தாறாயிரப்படி வ்யாக்யாநத்தில், ''நம்மாழ்வார் உபதேசமும் பக்தியும் இதுதான். வேதாந்த விஹிதையான பக்தியைப் பற்றித் தானேயானலோ வென்னில்.... அபசூத்ராதிகரண ந்யாயம் ப்ரஸங்கிக்கும்'' என்று அருளியது மிகவும் முக்யமான விஷயம். ஒன்றான ப்ரபந்நஜந ஸந்தாநகூடஸ்தர் நிலையிலேயே மாறுதலில்லை யென்றால் இதரர்களுக்குக் கேட்கவேண்டுமோ?

ஆகில், 'நம்மாழ்வார் நமக்கு ஆசார்ய பரம்பரையில் பதம் பெற்றிருப்பது எப்படி?' என்பதாகச் சிலர் நினைக்கக்கூடும். அத்வைதிகள் முதலியோர் இதை ஒரு இழிவாகவும் நமது ஸம்ப்ரதாயத்தில் காட்டிவருகிறார்கள். இது மிகவும் அப்ரஸக்தமானது. யோகதசையில் ஸாக்ஷாத்தாக ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு ஆவிர்ப்பவித்து ஸர்வார்த்தங்களையும் உபதேசம் செய்தருளினார் ஆழ்வார் என்பதன்றோ நமது ஸித்தாந்தம்? சுமார் நாலாயிரம் வர்ஷங்கள் ஆழ்வாருக்கும் நாதமுனிகளுக்கும் இடையே யுள்ளது. முக்த தசையிலேயே ஆசார்யகம் என்பது ஸுவ்யக்தம். ஸ்ரீமதுரகவிகளுக்கும் ஆழ்வாருக்கு முள்ள சிஷ்யாசார்ய க்ரமத்தை அவ்வேர ஸம்ப்ரதாயத்திற்கும் சாஸ்த்ரங்களுக்கும் அநுகுணமாகக் கொள்வது.

சததூஷணியில் 66-வது வாதத்தின் இறுதியில் ஆழ்வார்களைப்பற்றி மதாந்தரஸ்தர் செய்துள்ள ஓர் ஆக்ஷேபத்திற்கு ஸ்ரீ தேசிகன் அருளிய ஸார மான ஸமாதாந மிங்கு நோக்கத்தக்கது. அதாவது:

“ சூரிஸக்தாநாம் சநக ஸநந்தநாதீநாம் ஐஷ்டாவதார ஹேதுதாபி வஸநாத ப்ரஸித்தம் ।
தேந தேஷாம் ப்ரவ்ருத்திஷ்வபி ஜாதிகம் நாவச்யம் ஸர்வத்ர ஸாமான்ய தர்மாதிவ்ருத்தி ஸத்ப்ரவ்ருத்திஷு ஸ்தாநே ஸ்தாநே நிர்ணேதவ்யம் । ”

என்று இப்படி ஆழ்வார்கள் நித்ய ஸூரிகளின் அவதார விசேஷ மென்பது புராண ப்ரஸித்த மாகையால், விபவாவதாரத்தில் லோக ஸங்க்ரஹத்திற்காகவே ஜாதி நியமத்தை நடத்திக்காட்டியதே யன்றி, வஸ்து வ்ருத்தியில் அவர்கள் அந்த ஜாதியைச் சேர்ந்தவரானமையைப்பற்றி யன்று. பெரும்புலியூர் யஜ்ஞ ஸதஸ்ஸி லே மழிசைவந்த சோதி, தமது அவதார ஜாதிக்கு ஏற்ப நடந்துகொண்டது ஸம்ப்ரதாய ஸம்ப்ரதிபந்நமானது. ‘உலோக சாரங்கமாமுனி தோள்தனிலே வந்து’ என்று திருப்பாணாழ்வார் விஷயமாக ப்ரபந்தஸாரத்தில் ஆசார்யன் அருளி யுள்ளார். இதன் ஔசித்யாதிசயத்தைப்பற்றி அண்ணாஸ்வாமி நன்றாக விவ ரணம் செய்திருப்பது மிகவும் பொருத்துமானது. ஸாயுஜ்ய தசை அது என்ப தாக அவர் விவரணம்.

‘ஸ்ரீ விதுரரும் ஸ்வஜாத்யநுரூபமாக விவாஹாதிகள் பண்ணினார்’ என் றும் ‘சூத்ரயோநாவஹம் ஜாதோ நாதோऽந்யத் வக்துமுத்ஸஹே’ என்றும் விதுரர் விஷயமான ஜாதிநியமத்தை ஸ்ரீதேசிகன் நிஷ்கர்ஷித்திருப்பது முற் கூறிய ப்ர மாணங்களுக்குச் சேர்ந்துள்ளது. ப்ரஹ்மவிதக்ரேஸரான விதுரர் தாமே தம்மைச் சூத்ரஜாதியைச் சேர்ந்தவன் என்று அருளுகிறார். இது ஒன்றே அமை யாதோ ப்ரக்ருத வசநத்தின் கருத்தை நிர்ணயிப்பதற்கு? ‘இவருக்குத் தர்ம புத்ரன் செய்த ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரம் தூஷ்ணீம் அநுஷ்டித மாதல் வ்யக்தி விசேஷம் நியதமாகலா மத்தனை’ என்பதாக பக்ஷத்வயமும் ஆசார்யன் அருளு கிறார். ஆகவே, ஸமந்த்ரகமாகவே ப்ரஹ்மமேதம் இருக்குத் தர்மபுத்ரன் செய் தார் என்றாலும் ஸம்மதமே. ‘இதுகொண்டு வ்யக்த்யந்தரங்களில் ந்யாயஸஞ் சாரம் பண்ண வொண்ணாது’ என்பதாக தேசிகன் தாமேபணித்தார்.

சாபாநுக்ரஹாதி விசேஷ நிதாநங்களாலே அஹல்யை வீதிஹவ்யர் போன்றவர்களுக்குப் பூர்வஜாதி மாறியதும் ஜாத்யந்தரம் ஏற்பட்டிருப்பதும் ப்ரதிபந்நமானது. த்ரிசங்கு க்ஷத்ரியனாயிருந்து வஸிஷ்ட சாபத்தாலே சண்டாள னானான். ‘சிலாத்வே ஸ்த்ரீத்வாதி: சாபாய ஸம்பவ:’ என்றும் அருளினார். சிலா ஜாதி நீங்கி ஸ்த்ரீஜாதியை அஹல்யை பெற்றாள். உத்தரையின் கர்ப்பத்தில் தக்தமான வோர் தாரு கண்டமானது பரீக்ஷித்தாக மாறியது. ஸ்ரீராமவதாரத்தில் ப்ராஹ்மண புத்ரன் மரித்த பின்பு அவன் புநர்ஜந்மம் பெற்றான். இங்கு ஜாதி

நசித்து மறுபடி ஏற்பட்டதாகவே கொள்ளவேண்டும். இப்படி விசேஷ ஹேதுக்கள் ப்ரத்யக்ஷத்தாலும் கண்டோக்தமாயுமுள்ள விடங்களில் ஜாதி நாசம் ஸம்மதமே. விசேஷ வசந மின்றிக்கேயிருக்க, விதுரர் முதலானோருக்கு சூத்ரத்வம் வசந ஸித்தமாயு மிருக்கச்செய்தே, ப்ரஹ்மமேத ஸம்ஸ்காராதி லிங்கங்களைக் கொண்டு ஜாத்யந்தரம் கல்பிப்பதற் கில்லை. (பெரிய உடையார்) ஜடாயுவுக்கும் ராமன் ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரம் செய்துள்ளார். அவர் ப்ராஹ்மண்யம் பெற்றவரன்றோ? அவர் பகவத் பக்தாக்ரேஸர ரன்றோ? விப்ர ராகவேண்டாமோ? மஹாராஜர் (ஸுக்ரீவன்) சிறிய திருவடி ப்ரப்ருதிகள் பக்தராயிருந்தும் ப்ராஹ்மண்யம் பெறவில்லை. குஹன் பக்தாக்ரேஸரன் அன்றோ? வேடஜாதி மாறவில்லையே. ஆகவே ஶாபாநுக்ரஹாதிகளாலே ஜாதிபேதம் விசேஷித்துச் சொல்லப்பட்டிருந்தா லன்றி, பூர்வர்களிடமோ இக்காலத்தவரிடமோ பக்தியின் உண்மை இன்மைகளையிட்டு உத்க்ருஷ்டாபக்ருஷ்ட ஜாதி ஏற்படுவதாகக் கொள்வதற்கில்லை. 'திருஸுரபியாலும் கோத்வம் கழியாதிறே'. ஆகவே பகவத் பக்தி பாவங்களையிட்டு ஜாதியைத் தீர்மானிக்கவொண்ணாது என்றும், இன்ன ஜாதியிலிருந்து இன்ன ஜாதியை அடைவாய் என்றும், சாபமோ அநுக்ரஹமோ ஏற்பட்டிருப்பதை விசேஷித்துக் காட்டும் வ்யக்தி விசேஷத்தில் பூர்வ ஜாதி நாசமும் ஜாத்யந்தரமு மிசையவேண்டு மென்றும் இதன் நிஷ்கர்ஷம்.

'விச்வாமித்ரருக்கு ப்ராஹ்மண்யம் ஜந்ம ஸித்தமா ? அல்லது வந்தேறியானதா ?' என்பதாக ஒரு சர்ச்சை நம் ஸம்ப்ரதாயத்தி லுள்ளது. இதைப்பற்றிய வ்யாஸத்தை அடுத்த ஸஞ்சிகையில் விஜ்ஞாபநம் செய்கிறேன். இங்கு முக்யமான ஒரு விஷயம். '[illegible]' என்பதாக ஸம்ப்ரதிபந்நமான தொரு சாஸ்த்ர நிர்ணய முண்டு. சீல வ்ருத்தாதிகளையிட்டுத் தீண்டாமையை ஸங்கோசம் செய்வது கலியுகத்தில் கூடாது என்பதாக சாஸ்த்ரம். ப்ராஹ்மணன் அக்நிவேத ஸம்பந்நனாகில் ஒரு நாளிலும், வேத மாத்ரம் உளதாகில் மூன்று நாளிலும், நிர்க்குணனாகில் பத்து திநங்களிலும் சுத்தியடைகிறான் என்கிற குணக்ருதமான வ்யவஸ்தை இந்த கலியுகத்திற் கூடாது. நிர்க்குணனுக்குக் காட்டிய பத்து திநம் தீட்டு என்கிற நிலையே அக்நிவேதமந்வித ரானவர்களுக்கும் என்று கொண்டிருக்கிறோம். ஆகவே இந்த யுகத்திற்கென்றே விசேஷித்துத் திண்டாடைம தொலையாமையை லோகக்ஷேமத்திற்காக ஏற்படுத்தி, அது ஜநந மரணாதிகளில் எல்லோரும் அநுஷ்டித்தும் வருகிறார்கள். இதையும் நிதாநித்துக்கொள்ள வேண்டியது.

———

189237

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

சிறுபுலியூர்ச் செல்வன்

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசாரியர் M. A. வித்வான் L. T. திருவையாறு.]

ஸர்வகலாசாலைப் பரிக்ஷைகளின் ஆரவாரங்கள் முடிந்தன. ஹாஸ்டலில் பெரும்பாலும் மாணவிகள் இல்லை. அவரவர் தத்தம் ஊர்களுக்குச் சென்றுவிட்டனர். சுமார் நாற்பது ஐம்பது மாணவிகளே இன்னும் இருந்துவந்தனர். அவர்களும் மணிக்கு ஒருதரம் நால்வர் ஐவராகக் குறிப்பிட்ட ரயில்வண்டிகளை உத்தேசித்துப் புறப்பட்டுக்கொண்டிருந்தனர்.

பங்குனித் திங்கள். தெள்ளிய நீலப் பரப்பாகிய வானில் சந்த்ரன் தன் குளிர்ந்த கிரணங்களைப் பகலெல்லாம் பரிதபித்த பூமிப் பரப்பில் அமுதவெள்ளம் போல் வாரி யிறைத்துக்கொண்டு விளங்கினான். ஹாஸ்டல் 'வெராண்டா' வில் பால் வெள்ளம்போல் நிலவு வீசுகிறது. இரவு ஸமயம்; எங்கும் நிச்சப்தம். ஹாஸ்டலுக்கு முன்புறம் உள்ள சவுக்கு மரங்கள் 'ஹோ' என்று சப்தித்துக் கடற்காற்றில் அசைந்தன. அந்த ச்ருதியை அடிப்படுத்திப் பாடுவதுபோல், எதிரிலுள்ள நீலக்கடல் சப்தித்தது. குளிர்ந்த கடற்காற்று உடலுக்கு ஹிதம் செய்தது.

ஓர் ஸோபாவில் சாய்ந்தவண்ணம், கடலை உற்றுநோக்கிய முகத்துடன் இரு மாணவிகள் உட்கார்ந்திருந்தனர். இருவரும் நீலக்கரை வெள்ளைச் சேலையும் வெள்ளைக் கைச்சட்டையும் தரித்திருந்தனர். ஒருத்தி மெல்லிய வடிவம். கறுத்துச் சுருண்டு நில வொளியில் பளபளத்துக் கறுப்பு வெல்வெட்டெனத் திகழ்ந்து பின்ன லிடப்பட்ட கூந்தல். வெளுத்த தோற்றம். கறுத்து நீண்டு ஆழ்ந்து கனவு காண்பதுபோன்ற கண்கள். எடுப்பானதும் சற்றுத் தீர்க்கமானதுமான நாஸிகை. கொவ்வைச் சிறுவாய். பொன் தவழும் மெல்லிய நீண்ட கரங்கள். இவள் பெயர் ரேவதி. மற்றொருத்தி சற்று சதைப்பற்றுள்ள உடல். பொன்னிறத் தோற்றம். கறுத்து அடர்ந்து கிரேக்க தேவிகள்போல் தலையின் உச்சிப் புறத்தே தூக்கியிடப்பெற்ற அழகிய கொண்டை. தந்த வளையல்களிடப் பெற்ற மாம்ஸலமான கரங்கள். இவள் பெயர் ப்ரமீலா.

ப்ரமீலா-[சிரித்து] ஓ, புயலா! வரலாம் வரலாம்; உன் புத்தியை மயக்கும் புங்கவன் வருங் காலத்தில்................

ரேவதி – ப்ரமீலா! எனக்கு இந்தக் காதல் என்னவோ பெரிய ஆறுதலாகத் தோன்றவில்லை. நாம் படித்த ஆங்கில வடமொழி தமிழ் இலக்கியங்களில் அதையே வாழ்வின் இன்பத்திற்கு ஆதாரமாகச் சொல்லுகிறார்கள். எனக்கு அது............ அவ்வளவு...........

ப்ரமிலா—காளிதாஸன், கம்பன், ஷேக்ஸ்பியர், ஓமர்காயம், இவர்களை மறந்தாய்போலும்! இந்த அழகிய இரவில், அதோ பரந்த வானம்; உதித்தெழுந்த தண்மதி; தாபத்தைப் பறிக்கும் தண்ணிய வாடை; ஒலிக்கின்ற கருங்கடல்; வெள்ளிய மணற்பரப்பு; உன்னுடன் பேசுவது நானாக இல்லாமல் ஓர் இளங் கட்டழகனாயிருந்தால், இந்த இயற்கைப் பொருள்கள் உனக்கு வேறு உபதேசங்களைச் செய்யும் அல்லவா!

ரேவதி—[தன் அகன்ற விழிகளைச் சற்றுத் துயர்படச் சுழற்றி] ப்ரமீலா! எனக்கு இந்தப் பாஷைகள் அலுத்துவிட்டன. மந்த மாருதமும் மதியார்ந்த வானமும் வம்புலாம் பொழில்களும் வாழ்க்கையில் எப்பொழுதும் இன்பமாகுமா? அது கிடக்கட்டும்; லீவிற்கு உன் 'ப்ரொக்ராம்' என்ன?

ப்ரமீலா – நான் கல்கத்தா போகிறேன்; காலேஜ் திறக்கும்பொழுது தான் வருவேன். நீ..........

ரேவதி—நான் நன்னிலத்துக்குப் போகிறேன். க்ராம வாழ்க்கையிலும், முடிந்தால் க்ராம ஜன ஸேவையிலும் சிறிது ஈடுபடுவேன்.

மாடிப் படிக்கட்டில் கீழே இறங்கிச் செல்லும் மாணவிகளின் தடதட சப்தம் கேட்டது. 'ப்ரமீலா! படுக்கச் செல்லலாம்' என்றாள் ரேவதி. 'உன் புயல் உனக்கு வரட்டும்' என்று புன்னகையுடன் ஆசீர்வதித்தாள் ப்ரமீலா.

நன்னிலத்திற் கடுத்த 'நடுவாஞ்சேரி' என்னும் க்ராமத்தில் தன் பெரிய தாயார் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள் ரேவதி. சென்னையின் குழப்பத்தில் – கடலின் கர்ஜனையில்—வாழ்ந்த அவளுக்கு இந்த க்ராமத்தின் அமைதி ஆனந்தமாயிருந்தது. தினம் மூன்று மைல் நான்கு மைல் தூரம் பரந்த வயல் வெளிகளில் உலாவி வருவாள். கள்ளங் கபடற்ற க்ராமத்து ஜனங்களின் உழைப்பையும், அன்பையும், ஆடம்பரமற்ற வாழ்க்கையையும் கண்டு ஆனந்த மடைந்தாள். நாகரிகமே வடிவெடுத்து வனதேவதைபோல் விளங்கும் இவளைக் கண்ட க்ராமத்தவர் 'இவள் யாரோ தெய்வம்' என்றும் வியந்ததுண்டு.

சித்திரைத் திங்கள். நிறைமதி நாள். இனிய குளிர்ந்த காற்று வயற்புறங்களில் வீசுகிறது. ரேவதி தானாக நடந்துவந்தவள், இருபுறமும் உயர்ந்த குளிர்ச்சி தரும் தென்னை மரங்கள் அடர்ந்த ஒரு பாதையில் வந்து சேர்ந்தாள். தென்னைமரச் சாலை; இருண்ட மா, புன்னை, இலுப்பை மரங்கள் அடர்ந்த பொழில். பொழிற்கப்பால் அழகிய கம்பீரமான ஓர் கோயிலின் கோபுரம். உத்ஸாகத்துடன் ரேவதி நடந்தாள். தன் வாழ்வின் பெரும்புயல் அன்று ஆரம்பமென்று அறிந்தாளில்லை. வழிப்போக்கனை வினவ, அது சிறுபுலியூர் என்னும் க்ராமம் என்றறிந்தாள். கோயிலுக்குள் சென்றாள். வெளி ப்ராகாரத்தில் த்வஜஸ்தம்பத்தின் கீழ்ப்புறம். உயர்ந்த மண்டபத்தில் ஓர் தெய்வத்தின் திருவுருவம்

தென்பட்டது. அங்கு ஒரு குத்துவிளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. ஆனல் உதிக்கின்ற பூர்ண சந்த்ரனின் முழு ஒளியும் இறைவனின் பின்புறம் வீசப் பெற்று, அவனது வடிவத்திற்கு எல்லேயில்லாத வடிவழகை எடுத்துக் காட்டியது. ஒரு புறம் நீண்ட தென்னஞ் சோலேயா லாகிய குளிர்ந்த வழியும், எல்லேயற்ற வயற் பாப்பும். மற்ருெரு புறம் அழகிய திருவாயிலுடன் கூடிய கோவில் எதிரில் இனிய வர்ணப் பூக்களா லாகிய திருமாலேகளேத் தரித்த திருமால்.

அருகே நெருங்கினள் ரேவதி. பாலன்ன நிலவு அவள் உடலெல்லாம் தவழ்ந்தது. க்ருஷ்ண ஸர்ப்பம்போல் கால்வரையில் தொங்கும் பின்னல். தூய வெள்ளேச் சேலே. அதற்குப் பரபாகமான நீலக் கரை. மெல்லிய 'வாயில்' கைச்சட்டை. கொடிபோன்ற சரீரம். ஆழ்த்த யோசனே கொண்டது போன்ற நீலக் கருங்கண்களில் நிர்மல சந்த்ரனின் நிலவு விழவும், ஒரு ஒளிவீச ஆரம் பித்தது. எதிரில் உள்ள வடிவத்தை வணங்கினள்; எழுந்தாள்; கைகுவித்தாள்; நோக்கினள்; ப்ரமித்தாள்; நெருங்கினள்; பெருமூச்சு விட்டாள்; வியந்தாள். மற்றும் நெருங்கினள்.

கம்பீரமான வடிவம்; உயர்ந்த நீண்முடி. சற்று இருண்டு காட்டிய திரு மேனி நிறம். நிமிர்ந்த மார்பு. பருத்துக் குலவரைபோல் குலவுந் தோள்கள். தோள்களே நோக்கிச் சாய்ந்து திகழும் திவ்யாயுதங்கள். சிற்றிடை. நீண்ட அழ கிய கரங்கள். இடையில் தவழும் மஞ்சள் பட்டாடை. அழகிய திருவடியிணே. ஆங்குத் திகழும் பொன் சிலம்புகள். பரந்து நிறைமதியை வென்ற திருமுகம். அழகிய கருங் கண்ணிணே—அருள் பொழியும் கண்ணிணே—துயரை மாற்றுங் கண்ணிணே—வந்தவரை வரவேற்கும் கண்ணிணே. அருளும் அழளும் வெற்றியும் வீரமும் செறிந்த அத்திவ்ய வடிவைக் கண்டவுடன் ரேவதி தலேமுதல் கால் வரை யில் மின்சாரம் பாயப்பெற்றவள்போல் அதிர்ச்சி யுற்ருள். ஓர் இன்ப நடுக்கம் கொண்டாள். கண்கொட்டாது இறைவனே நோக்கினள். மண்டபத்தில் யாரு மில்லே. நிலவு பொழிகிறது. காற்று வீசுகிறது. மரங்கள் 'ஹோ' வென்று மெல் லொலியாய் ஒலிக்கின்றன. 'குழந்தாய்! என்ன நோக்குகிருய்?' என்ருர் ஒரு பெரியவர். என்ன குரல்! என்ன காம்பீர்யம்! ரேவதி திடுக்கிட்டுத் திரும்பினள். நித்ய ஸூரியா? அல்லது ஆழ்வார்களில் ஒருவரா? ஒளியும் அருளும் பாலன்ன நிறமும் த்வாதச புண்டாமும் திகழும் அத்தூயனே ரேவதி நமஸ்கரித்து எழுந் தாள். அவர் சொன்னர்:—

“வத்ஸே! இது சிறுபுலியூர் என்னும் தலம். பரமபதத்தை விட்டுப் பாபி களுக்காக அர்ச்சாவதாரமாக அச்சுதன் வந்தான். நிறைந்த வடிவழகுடன் இங்கு ப்ருகுமுனிவரின் புத்திரியா யவதரித்த திருமாமகளே மணந்து தேவரார் தொழ வாழ்கின்ருன். பட்டிண மில்லே. இங்குமேல் விழுந்து நெருங்கித் தொழுவா ரில்லே. ஆயினும் அவனது அருள் குன்ருது. காட்டில் எரித்த நிலவுபோல அவன் வடிவழகு அநுபவிப்பா ரற்று நிற்கிறது. இன்று உன் உள்ளங் குளிர்ந் ததைக் கண்டேன்; மகிழ்ந்தேன். வத்ஸே! திருமங்கையாழ்வாரிடம் உள்ளக் கனி

வுடையவர்கள் குறையவில்லை யென்று துணிந்தேன். இத்தலத்தில் அப்பெருமானுக்கு மிகவும் அன்பு. அச்சுதன் வாழும். இடம், சிறுபுலியூரும் அடியாரது உள்ளமுமாம். அவரது காதலைப் பார்.

"கள்ளம் மனம் விள்ளும் வகைக் கருதிக்கழல் தொழுவீர்
வெள்ளம்முது பரவைத்திரை விரியக்கரை யெங்கும்
தெள்ளும்மணி திகழும்சிறு புலியூர்ச்சல சயனத்
துள்ளும்என துள்ளத்துளு முறைவாரையுள் ளீரே"

தேவாதிதேவனுக்கு க்ருபாஸமுத்ர மென்று பெயர். எவ்வளவு அழகிய பெயர்! பெருமாட்டிக்குத் தயாநாயகி யென்று பெயர். பாபிகள் வந்து புனித மாவதற்கு இதைவிட வேறு இடம் வேண்டுமா? வத்ஸே! நீ என்ன நினைக்கிறாய்?

ரேவதி — என்னை இத்தயாநிதி அங்கீகரிப்பனா?

ஸ்வாமி — எப்படி? எவ்விதமாக?

ரேவதி — ஸ்வாமி! என் வாழ்க்கைப் புயலைக் கண்டுவிட்டேன். அது வீச ஆரம்பித்து விட்டது. என்னை அவன் ஆண்டாள்போலத் திருவுள்ளம் பற்றுவானா?

ஸ்வாமி — பற்றுவான்; நீ என் செய்யப்போகிறாய்?

ரேவதி — 'என் வாழ்நாளை, நாடு நகரும் நன்கறிய நாராயணா என்றேத்தி அவன் அன்பில் தழைக்குமாறு செய்யவும், ஆழ்வார்கள் அருளிச்செயல்களை ஆபால கோபாலம் அனுபவித் துய்யவும், ஆழ்வார்கள் போட்ட அன்புவழியைக் கைப்பிடித்து வாழ்வில் பேரும் பெற்றியும் அடைந்து எல்லாரும் உய்ந்து போகும் நெறி நிற்கவும் பாடுபட அவாவுற்றேன். ஆனால்—ஆனால்—இம்மாமணி வண்ணன் மன மிரங்குவானா?' என்று சொல்லிக் கொண்டே ரேவதி கீழே விழுந்து நமஸ்கரித்தாள்.

ஸ்வாமி, தம் மெல்லிய கரத்தை அவள் சிரஸ்ஸில் வைத்தார். "வத்ஸே! எழுந்திரு. அவன் ஒப்புக்கொண்டான்" என்றார். அவர் சொல்வதை ஆமோதிப்பதுபோல் கோவில் மணி டணர் டணா ரென்று அடித்தது.

ஸ்ரீ:

செய்திகள்

(1)

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்

ஸ்ரீ ஆண்டாள் திருநன்னுட் கொண்டாட்டம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தில் திருவல்லிக்கேணி ரத வீதியிலுள்ள ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீ ஆண்டாள் வாரம் பின் வருமாறு கொண்டாடப் பெற்றது. 17—7—47 வியாழன் மாலே 6½-மணி—'கோதையும் கம்பரும்' என்ற விஷயம்பற்றி உபந்யஸித்தார் ஸ்ரீமான் பந்தல்குடி ரெ. திருமலே அய்யங்கார். 18உ வெள்ளி மாலே 6½-மணி—குருச்சி ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸவேதாந்தாசாரிய ஸ்வாமி 'கோதோபநிஷத் ஸாரம்' எனும் விஷயத்தைப் பரக்க விளக்கினர். 19உ சனி மாலே 6½-மணி, வித்வான் ஸ்ரீ ஜகந்நாதாசாரியர் அவர்கள், 'ஸ்ரீ ஆண்டாள் கவி' என்ற விஷயமாய் ஸாரமான சொற்பொழிவு ஆற்றினர். 20உ ஞாயிறு அன்று, ஸ்ரீ. பி. டி. ஸ்ரீநிவாஸய்யங்கார் தினக்கொண்டாட்டம் நடைபெற்றது. விவரம் வருமாறு:—காலே 8-மணி—திருப்பாவை தையொரு திங்கட் பாமாலே ஸேவை காலே 9½-மணி—ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஸஹஸ்ரநாமார்ச்சனே. காலே 10-மணி—ஸ்ரீ தேசிக; ப்ரபந்த ஸேவை; மாலே 4-மணி—ப்ரஹ்ம ஸ்ரீ குலபதி ஸுப்ரமணிய அய்யர் அவர்களால் வால்மீகி ராமாயணத்தில் நாட்டு நகரச் சிறப்புப் பற்றி விரிவான உபந்யாஸம்; மாலே 6-மணி—தலேவர் ஸ்ரீமான். திருவழுந்தூர். டி. எஸ். ஸுந்தரமய்யங்கார் அவர்கள் முற்றுரை; 6½-மணி—ஸஹஸ்ரநாம பாராயணம் 21உ திருவாடிப்பூரம். மாலே 6-30 மணி—'ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணம்' எனும் விஷயம் காரியதரிசியால் உபந்யஸிக்கப் பெற்றது. அன்பர்கள் கேட்டு இன்புற்றனர்.

ப. ரெ. திருமலே அய்யங்கார்,
காரியதரிசி.

(2)

கருடபுரம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

நாளது ஸர்வஜித்ஸு ஆடிமீ 22உ (7—8—47) வியாழக்கிழமை ஸ்ரீமத் கருடபுரம் ஸ்ரீபரமஹம்ஸேத்யாதி ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் ஆடிமீ 17உ ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கப்பட்டு, உபய வேதாந்த க்ரந்த பாராயணங்களுடன் ஸ்ரீ மதுராந்தகம், ஸ்ரீ ஸ்வாமியின் பூர்வாச்ரமத் திருமாளிகையில் வெகு ஸம்ப்ரமமாக நடைபெற்றது. பஹு ஸ்வாமிகள் ஷை மஹோத்ஸவத்திற்கு எழுந்தருளி யதோசிதம் கைங்கர்யங்களில் அந்வயித்தார்கள்.

கருடபுரம். தி. ஈ. ஸ்ரீநிவாஸ தாஸ:

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந் நமோ பகவதே புருஷாய துப்யம்॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ராஜ்ய லாபம்.

சென்ற ஆடிமீ 30உக்குச் சரியான ஆகஸ்ட்மீ 15உ வெள்ளிக் கிழமை திநம் நமது தேசத்து ராஜ்ய நிர்வாஹம் இங்க்லீஷ்காரர்களை விட்டு விலகி நம்மிடம் வந்து விட்டது. இது பெரியதொரு ஸந்தோஷத்துக்கு ஹேது. இந்த நிஷ்பத்திக்காக நமது தேசத்துப் பெரியோர்கள் அநேக வர்ஷங்களாக மஹத்தான ப்ரயத்நங்களைச் செய்து வந்தார்கள்; அந்த ப்ரயத்நங்களில் அவர்கள் அநுபவித்த துயரங்கள் மிகப் பல. மஹாத்மா காந்தியின் ஸாத்விகமான விடா முயற்சியே கடைசியாக இதை ஸாதித்துக் கொடுத்தது என்று நிர்விவாதமாகச் சொல்லலாம்.

இது ஒரு பெரிய லாப மாதலால், இதனால் ஸந்தோஷத்தை அடையாதவர் ஒருவருமிலர். நாட்டுக்கு நாடு, வீட்டுக்கு வீடு அத்யுத்ஸாஹத்துடன் கொண்டாட்டம். ஆனால் இது ஒரு பெரிய சுமையை நமது ஶிரஸ்ஸில் வைத்து விட்டது என்பதை நாம் மறக்கக்கூடாது. இந்தப் பாரத்தை ஸாக்ஷாத்தாக வஹிக்கப்போகும் நமது அதிகாரி வர்க்கத்தினர்க்கு நாம் ஒரு தைர்யம் சொல்வோம். அது என்னவென்றால்: 'கார்யா கார்யங்களைத் தீர்க்கமாக ஆலோசித்து, தர்ம மார்க்கத்தை விட்டுச் சற்றேனும் விலகாமல் நடந்து வந்தால் உங்கட்கு எவ்வித ச்ரமமும் நேரமாட்டாது' என்பதுதான். தர்மம் என்பது பரம துர்ஜ்ஞேய மாதலால், அதைக் கேவலம் தமது புத்தி பலத்தைக் கொண்டு மாத்ரம் நிர்ணயித்து விடாமல், நமது தேஶத்திலுள்ள பெரியோர்களைக் கேட்டு, அவர்கள் சொல்லுகிறபடி அந்த நிர்ணயத்தைச் செய்துவர வேண்டுமென்றும் நாம் கேட்டுக்கொள்வோம்.

இது விஷயமாக நாம் மற்றுமொரு வார்த்தையைச் சொல்ல விரும்புகிறோம். சற்றேறக் குறைய 200 வர்ஷ காலமாக இங்கிலீஷ்காரர்கள் இந்தத் தேஶத்தை ஆக்ரமித்துக் கொஞ்சம் கொஞ்சமாக அதை ஸ்வாதீநம் செய்து கொண்டு வந்தார்க ளென்பது யாவரும் அறிந்ததே. கடைசியாக, மற்றை ஒருவராலும் அசைக்க முடியாத ஒரு ஸ்தைர்யத்தையும் அவர்கள் பெற்று விட்டார்கள். இந்த ராஜ்ய நிர்வாஹத்தைத் தமது ஸ்வாதீநத்தில் வைத்துக் கொள்வதில் அவர்களுக்குப் பலவித லாபமும் உண்டு. இப்படித் தமக்கே

உரிமையானதும் லாபத்தைக் கொடுக்கக் கூடியதுமான ஒரு அநர்க்கமான ஸொத்தை, அவர்கள் ஸ்வயமாகவே எவ்வித நிர்ப்பந்தமு மின்றிக்கே, பிதா புத்ரனுக்குத் தாய தநத்தைக் கொடுப்பது போலக் கொடுத்து விட்டுத் தாங்கள் தமது தேஶத்தை நோக்கி செல்கிறார்க ளென்றால் அவர்களுடைய பெருந் தன்மையைப் பற்றி என் சொல்வது ? ஒருக்கால் கபடமாக வேறு பெரியதொரு ஸ்வார்த்தத்தை ஸாதித்துக் கொள்வதற்காக இப்படிப்பட்ட ஔதார்யத்தை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்களோ வென ஒரு ஶங்கை சிலர்க்கு ஜநிக்கலாம். அம்மாதிரியான மோச எண்ண மொன்றும் அவர்களிடம் இருக்கின்ற தென்று சொல்வதற்கு ஹேது ஒன்றுமில்லை. நிர்மலமான ஸத்வ குணமே இவர்களை இந்த நற்கார்யத்தில் தூண்டிற் றென்று நம்பி நாம் அவர்களுடைய ஆத்ம குண பூர்த்தியை மிகவும் போற்றுகிறோம்.

* * * * *

'ஹரிஜநங்க ளென்று வ்யவஹரிக்கப்படும் ஜநங்களின் ப்ரவேஶத்தால் ஆலயங்களிலிருந்து தைவ ஸாந்நித்யம் விலகி விடுகிறதா? அந்த ஆலயங்களுக்குப் போய்ப் பகவானை ஸேவித்து வரலாமா? ஸேவித்து வந்தால் அப்படி ஸேவித்து வருபவர்களுக்கு ஏதாவது அசுத்தி ஸம்பவிக்கின்றதா?' இத்யாதியான விசாரங்கள் அநேக ஆஸ்திகர்களை இப்போது க்லேஶப் படுத்திக்கொண்டிருக்கின்றன.

ஹரிஜந ப்ரவேஶமும் தைவ ஸாந்நித்யமும்

சென்ற ஆனி மாஸத்தில் திருவெவ்வுளூரில் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதியில் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் நடந்தபோது, அங்கு அநேக வித்வான்கள் எழுந்தருளி யிருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீ அழகிய சிங்கர் அவர்களைக் கொண்டு ஒரு ஸதஸ் கூட்டி, ப்ரக்ருத விஷயத்தைப் பற்றித் தீர்க்கமாக விசாரித்து ஒரு விதமான நிர்ணயத்தைச் செய்திருப்பதாக நாம் அறிகிறோம். அந்த நிர்ணயத்தின் ப்ரகாரங்கள் எப்படிப்பட்டவை யென்பது நமக்கு நிஷ்க்ருஷ்டமாகத் தெரியவில்லை. அவர்கள் செய்திருக்கும் நிர்ணயம் ஸகல ஜநங்களுக்கும் வ்யக்தமாக விளங்கும்படி வெளியிடப்பட்டால் எல்லாருக்கும் த்ருப்தி ஜநிக்கும். அம்மாதிரி அநுக்ரஹிக்கவேணு மென்று நாம் ப்ரார்த்தித்திருக்கிறோம். ஆனால் அடியேன் அதில் ஸ்தூலமாகச் சில விஷயங்களை க்ரஹித்திருக்கிறேன். அவற்றை நமது ஸௌஹ்ருத்துக்களுக்கு விண்ணப்பம் பண்ணிக் கொள்கிறேன்.

ஆலயங்கள் ஸ்வயம் வ்யக்தம் திவ்யம் மாநுஷம்முதலாகப் பல பிரிவுகளாக ஶாஸ்த்ரங்களில் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுள் கடைசியா யிருக்கும் மாநுஷாலயம் மாத்ரம், மநுஷ்யர்களால் ஸ்தாபிதமானதால், ஹரிஜந ப்ரவேஶம் முதலிய அநாசாரங்கள் ஸம்பவிக்கும்போது அது பகவத் ஸாந்நித்யத்தை இழக்கிற தென்றும், மற்றை நான்கு வித ஆலயங்களுள் ஒன்றிலும் இப்படிப்பட்ட அசுத்த ஸம்பந்தத்தால் தைவ ஸாந்நித்யம் விலகுகிறதில்லை யென்றும், ஆனால் அந்த ஆலயங்கள் விஷயத்திலும் அநாசார ஸம்பந்தம் ஏற்படும் பக்ஷத்தில் ஒருவித ப்ராயச்சித்தத்தைச் செய்துவிட்டு ஆராதநாதிகளைச் செய்யலா

மென்றும், அந்த ப்ராயச்சித்தமும் ஆராதநத்திலேயே அந்தர்ப் பூதமாய் அந்தக் காலத்திலேயே செய்யப்படலா மென்றும், அப்படி ப்ராயச்சித்தம் நடந்து விட்டால், அவ்விடத்தை விட்டுத் தைவ ஸாந்நித்யம் போகவில்லை யாதலால் ஸேவார்த்திகள் போய்ப் பகவத் ஸேவையைச் செய்து வரலா மென்றும், மறுபடியும் தோஷங்கள் ஸம்பவித்தால், பூர்வம் போலவே ப்ராயச்சித்த பூர்வகமாக ஆராதநாதிகள் நடக்கலா மென்றும், இம்மாதிரி அநுஷ்டிப்பது ஶாஸ்த்ர ஸம்மத மென்றும் அப் பெரியோர்கள் ஒரு வ்யவஸ்தையைச் செய்திருக்கிறார்களாம். மாநுஷ ஆலயங்களில் தோஷம் ஸம்பவித்தால், அங்குள்ள அர்ச்சைகளி லிருந்து தைவம் விலகிவிடுகிறபடியால், அவைகளை ஆராதிப்பதற்கு ஶாஸ்த்ரம் ஸம்மதிக்க வில்லையாம். ஆகையால் மாநுஷாலய மல்லாத கோயில் திருமலை பெருமாள் கோவில் முதலிய திவ்ய ஸ்தலங்களை ஆஸ்திகர்கள் பரித்யஜிக்க வேண்டா மென்றே இதனால் ஏற்படுகிறது. இந்த நிர்ணயம் ஶாஸ்த்ர ஸம்மத மாகையால் இது நம்மால் நிர்விவாதமாக அங்கீகரிக்கப்பட வேண்டியவைகள்.

'தஸ்மா ஶாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ'

என்பது ஸ்ரீ கீதாசார்யன் வசநமன்றோ?

* * * *

ஒரு பாச்சாத்ய ஸாஹ்ருத்தின் ரஸவத்தான பேச்சு.

சற்றேறக்குறைய முப்பது வர்ஷங்களுக்கு முன் நமது 'இந்திய நாஷனல் காங்க்ரெஸ்' என்று சொல்லப்பட்டு வரும் பெரியஜந ஸமூஹத்தின் வார்ஷிகக் கூட்டத்தில் ஒரு பாச்சாத்ய ஸாஹ்ருத் அக்ராஸநத்தை வஹித்தார். அக்காலத்தில் சில பாச்சாத்யர்கள் இந்தியர்களுக்கு அநுகூலர்களாக இருந்தார்கள். அவர்களுள் இவரும் ஒருவர். அவர் அப்பொழுது சிறந்ததோர் உபந்யாஸத்தைச் செய்தார். அது மிகவும் ரஸவத்தாக இருந்தது. அவர் கூறிய ரஸோக்திகளுள் ஒன்று இப்பொழுது நமது நினைவிற்கு வருகிறது. அதாவது:— "ஹே மஹா ஜநங்களே! நீங்கள் ஒரு முகமாக யாவரும் ஸ்வராஜ்யம் அபேக்ஷிக்கிறீர்கள். அதை நான் மிக்க ஸந்தோஷத்துடன் ஆமோதிக்கிறேன். அநேக அம்ஶங்களில் பாச்சாத்யர்களுடைய ஆட்சி உங்களுக்கு ப்ரதிகூலமாக இருக்கின்றது என்பது உண்மையே. அந்தக் காரணத்தால் நீங்கள் அதை விலக்கிவிட்டால் அதன் ஸ்தாநத்தில் நீங்கள் ஏற்படுத்துவதாக உத்தேஶித்திருக்கும் ராஜ்ய நிர்வாஹ வ்யவஸ்தை கண்டிப்பாய் க்ஷேமத்தைச் செய்யும் என்னும் நம்பிக்கை உங்களுக்கு இருக்கின்றதா? உங்களுக்குள் சொல்வன்மையும் பிடிவாத குணமும் வாய்ந்துள்ள சில பலிஷ்டர்களே மேலதிகாரத்தைப் பெற்று, துர்ப்பலர்களாயுள்ள ஏழை ஜநங்களை ஹிம்ஸிப்பார்களானால் நீங்கள் யாது செய்வீர்கள்? இதை நினைக்குங்கால் இவ்விஷயம் எனக்குப் பீதியை அளிக்கிறது. அந்த துஸ்திதி உங்களை அடையாமல் நீங்கள் பார்த்துவர வேண்டும்" என்பதுதான் அவர் சொன்ன வார்த்தை. அது இப்போது அநுபவத்தில் வந்துவிட்டது. இப்பொழுது நமக்கு அதிகாரிகளாக வந்துள்ளோர், சில சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென் றெண்ணி,

நமது பண்டைக் காலத்து ஸம்ப்ரதாயங்களை அடியோடு மாற்றுவதில் ப்ரவர்த்தித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நமது ஶாஸ்த்ரங்களில் நம்பிக்கையே யில்லை; கேவலம் தம் தம் புத்திபலத்திலேயே அவர்களுக்குப் பூர்ண நம்பிக்கை. நமக்கு இப்பொழுது ஸம்பவித்திருக்கும் துர்த்தசை முழுவதும், நமக்குள் நடைபெற்றுவரும் ஜாதிபேதத்தின் காரணத்தினாலே யென்பதும், அதை ஒழித்தால் நமக்கு ஸர்வ க்ஷேமமும் தானாகவே கிடைத்துவிடுமென்பதும் அவர்களுடைய தீர்மானம். ஜாதிபேதத்தைக் கொண்டாடுவதால், சில வகுப்பினர் தம்மை உயர்ந்தவரென்று நினைத்து மற்றவர்களை நிக்ருஷ்டராக நடத்தி வருகிறார்களாம். அது ஜநங்களுக்குள் இருக்கவேண்டிய ஒற்றுமையைக் குலைத்து விடுகிறதாம். ஆகையால் அதைத் தொலைக்க வேண்டுமாம். இதை உத்தேஶத்தில் வைத்துக்கொண்டு ஹரிஜநங்களுக்கு ஆலய ப்ரவேஶத்தை ஸாதித்துக் கொடுப்பதிலும், ஜாதிபேதமின்றிக்கே பாடசாலைகளில் எல்லாரையும் ஒன்று சேர்த்துப் படிப்பிப்பதிலும், அவர்களுக்குச் சேர்ந்தே போஜநாதிகளைச் செய்துவைப்பதிலும் மிகுந்த ஊக்கம் காட்டி வருகின்றார்கள். ஒருவரும் தம் தம் பெயருடன் 'ஐயர்' 'ஐயங்கார்' 'முதலியார்' 'நாயகர்' இத்யாதியான பட்டங்களைத் தரித்துக் கொள்ளக் கூடாதாம். இந்த உத்தரவுகளுக்கு மீறி நடந்தால் தண்டனையாம். இதென்ன அபந்யாயம்? இம்மாதிரியான சட்டங்களின் அக்ரமத்தைப் பார்த்து நாம் வியப்படைகிறதா? அன்றி இவைகளின் ஆநர்த்யத்தைப் பார்த்துத் துக்கிக்கின்றதா? என்பது தெரியவில்லை.

அதிகாரிகள் செய்யும் சீர்திருத்தங்கள்.

இது இங்ஙன மிருக்க: நாம் எல்லோரும் 'நாம் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்' என்னும் ஒரு பேதத்தைக் கொண்டாடி நமக்கும் மற்றவர்களுக்கும் இருக்க வேண்டிய ஐகமத்யத்தைப் பங்கபடுத்தி-கொள்ளுகிறோமென்று இந்த அதிகாரிகள் எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு சொல்லுகிறார்களோ நாம் அறியோம். அநாதி காலமாக நாம் இந்தத் தேஶத்தில் ஜாதிபேதத்தை அநுஷ்டித்து வருகையிலும், நாம் எல்லோரும் எவ்வித சச்சரவுமின்றிக்கே ஒத்து வாழ்ந்து வந்திருக்கிறோமென்பது அதிகாரிகள் அறியாததன்றே! எவ்விடத்திலோ யாரோ சிலர், ஜாதி நிந்தையில் ப்ரவர்த்தித்தால், அதை ஆதாரமாகக் கொண்டு ஸமூஹத்தையே தூஷிப்பது உசிதமாகுமா? இது விஷயமாக நமது ஶாஸ்த்ரம் சொல்லும் முறை யாது என்பதை ஆராய்வோம்.

சாஸ்த்ரம் சொல்லும் க்ரமம்

"ஶூத்ரம் ஶ்ரோத்ரியம் வாபி நிஷாதம் ஶ்வபசம் ததா।
வீக்ஷதே ஜாதிஸாமாந்யாத் ஸ யாதி நரகம் த்ருவம்॥"

[எவனொருவன் ஜாதியைக் குறித்து, 'இவன் நிஷாத ஜாதியைச் சேர்ந்தவன்; இவன் நாய் மாம்ஸத்தைப் புசித்துவரும் ஜாதியைச் சேர்ந்தவன்' இத்யாதியாக ஒரு ஸாதுவை உத்தேசித்து நிக்ருஷ்டமாக நினைக்கிறானோ அவன் நரகத்துக்கு இரையாகிறான்.]

" சுவஜ்ஞாயஃஉ நயஃாய ஹக்தஜநாதி திஷநழ "

[எவனொருவன் ஒரு பகவத் பக்தனைப்பற்றி, ' இவன் ஹீந ஜாதியிற் பிறந்தவன் ' என்று இழிவாக நினைக்கிருனோ அவனுக்குக் கேடே ஸம்பவிக்கும்.]

" சுநாஅாஙாநூ ஙாஅாஙா நஜ்ஞா சரநு ஹீநஜநநஃ ।
உஹ்தாநு ஶ்ரோத்ரியொ நிஷநு ஸஂஶ்ணாலுதாம் வ்ரஜெக ॥ "

[எவனொருவன் தான் நற்குலத்தில் பிறந்தவ னென்னும் பெருமையால் ஒரு பக்தனைப்பற்றி, ' இவன் ஆசாரமற்றவன், கீழ் ஜாதியில் பிறந்தவன் ' என்று நிந்தையாய்ப் பேசுகிருனோ, அவன் அப்பொழுதே சண்டாளத் தன்மையை அடைகிருன்.] இவ்வாறு ஶாஸ்த்ரங்கள் ஏகமுகமாக ஒருவனையும் ஜன்மம் காரணமாக அவமதிக்கக் கூடாதென்று கண்டித்திருக்கையில், அந்த ஶாஸ்த்ரத்தை நம்பினவர்கள் அந்தக் கண்டநத்தை அநாதரித்து நடப்பார்களா ?

நமது சீர்திருத்தக் காரர்களுக்கு ஒரு விண்ணப்பம்.

மற்றுமொரு விஷயத்தை, ஸமூஹச் சீர்திருத்தத்தில் மும்முரமாக ப்ரவர்த்திக்கும் நமது அதிகாரிகளுக்கு விண்ணப்பம் பண்ணிக் கொள்ளத் துணிவோம். நமது ஶாஸ்த்ரங்களை ஏற்படுத்தினவர்கள் த்ரிகால ஜ்ஞாநிகள் ; ஜகத்தின் க்ஷேமத்தை உத்தேசித்தே உழைத்தவர்கள் ; தமது யோக ஶக்தியால் ஸகல விஷயங்களையும் ஸாக்ஷாத்கரித்து, மஹா ஜநங்களுடைய இயற்கைக் குணங்களையும் ஶக்தியையும் நன்குணர்ந்து, அவைகளுக்குத் தக்கவாறு ஒரு வ்யவஸ்தா விஶேஷத்தை ஏற்படுத்தி யிருக்கிருர்கள். அவர்கள் செய்த அந்த வ்யவஸ்தையின் ஸூக்ஷ்மாம்ஶத்தைக் கிஞ்சித்தேனும் அறிய யோக்யதை யற்றிருக்கும் நம் அதிகாரிவர்க்கத்தினர் அதைச் சிதைத்துவிட ப்ரயத்நப் படக்கூடாது. அப்படிச் சிதைக்கத் துணிந்தால் பெரிய குழப்பமே விளையும் என்பது நமது ஶாஸ்த்ர ஸம்மதமான துணிபு.

* * * *

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் ஆருவது ஸம்புடம் தொடங்கி எட்டு மாஸங்களாகியும், நமது ஸஹ்ருத்துக்களில் சிலர் இவ்வர்ஷத்து (1947) சந்தாத் தொகையை (ரூ. 3) இன்னும் செலுத்தா திருக்கின்றனர். அவர்கள் தமது இவ்வர்ஷத்துச் சந்தாத் தொகையை நாளை ஸெப்டம்பர் மாஸத்துக்குள் அன்புடன் செலுத்திவிட வேண்டு மென்று ப்ரார்த்திக்கப்படுகிருர்கள். நமது சந்தாதாரர்களில் மற்றும் சிலர் 1946-ம் வர்ஷத்துச் சந்தா செலுத்தாமலே பாக்கி வைத்துக் கொண்டிருக்கிருர்கள். அவர்கள் இந்த ஆகஸ்ட் மாஸத்துக்குள் தமது சந்தாவைச் செலுத்தா விட்டால் அவர்கட்கு உபரி ஸஞ்சிகை அனுப்புவது நிறுத்திக் கொள்ளப்படும்.

இந்தச் சேஷ்டைக ளெல்லாம் கோபகார்யங்கள்; ' எங்கு முளன் கண்ணன் ' என்னும் ப்ரஹ்லாத வாக்யத்தை ஸத்யமாக்க வேண்டு மென்றெண்ணி, கேவல திர்யக் ரூபமும் கேவல மநுஷ்ய ரூபமு மின்றிக்கே, இரண்டும் கலந்த ஒரு விசித்ர ரூபத்துடன் ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஆவிர்ப்பவித்தான். பக்தாக்ரேஸரனை ப்ரஹ்லாதனை மிகவும் க்லேஶப்படுத்தின ஹிரண்யனைப் பஸ்மமாகச் செய்யவேண்டு மென்பது அவன் கருத்து. அதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட ரூபம் பயங்கரமாக இராமல் ஸௌம்யமாக இருக்குமோ? அந்தப் பீஷண வேஷத்தை இந்தப் பதங்கள் வெளியிடுகின்றன. இந்தப் பீஷண ரூபம் ஆரோபிதம் என்பதை நாம் மறக்கக் கூடாது. ஸ்ரீ பகவானுக்கு ஸௌம்யாகாரமே ஸ்வதஸ்ஸித்தம்; உக்ர ரூபம் ப்ரயத்ந ஸாத்யம். ' கொ யஶாஹாஈய த்தீவழ ' என்பது ஸ்ரீ வால்மீகி மஹர்ஷியின் திவ்ய ஸூக்தி, ' வநெ ஸுடாவடுரு ஹீஷணெ உவி ' என்று மாத்ரம் சொல்லப் போதுமாயிருக்க, ' ஸுடாவடுரு ஹீஷணெ கூரதெ உவி' என்று 'கூர த' ஶப்தத்தின் ப்ரயோகம் இந்த அர்த்தத்தை ஸூசிப்பிக்கின்றது.

உஙஜஸிம்ஹஉ தூஷநா—இந்த ரூபம் ஹிரண்யனுக்கு அதிபீஷணமாக இருக்கையிலும், அது ப்ரஹ்லாதனுக்கு மிகவும் ஸௌம்யமாக இருந்த தென்பதை உத்தரார்த்தம் விளக்குகின்றது. இது ஸ்ரீ பகவானுடைய தயையின் கார்யம். அந்தத் தயை அந்தப் பகவானுடைய திருக்கண்களைத் தாமரஸ புஷ்பங்கள் போல மிகவும் தர்ஶநீயமாகச் செய்து, ப்ரஹ்லாதனுக்கு ஸ்தந்யம் கொடுத்ததாம். அதாவது: ஶீதள கடாக்ஷ விஶேஷமாகிற க்ஷீர ப்ரவாஹத்துடன் கூடிய ஸ்தந்யத்தைக் கொடுத்து, அதிலிருந்து பெருகும் அம்ருதத்தாலே ப்ரஹ்லாதனுக்கு ஒரு போஷண விஶேஷத்தைச் செய்தது அந்தத் தயை என்பது கருத்து. ஸ்தந்ய பாநார்ஹதையைக் காட்டுவதற்காக ப்ரஹ்லாதனை ' ஸிம்ஹ ' [ஶிஶு] என்னும் பதத்தாலே வ்யவஹரிக்கிறார்.

கவடகெஸரிநு—இது ஸ்வாபாவிகமான ரூப மன்று; ஹிரண்யனுடைய வதத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட ரூபம்- இது இந்த்ர ஜாலம் போன்ற பொய்யான ரூபமென்றும் நினைக்கக் கூடாது. பகவதவதாரங்க ளெல்லாம் தத்யமே; ஆனால் விலக்ஷணமாகவும் ஆச்சர்யகர மாகவும் அவை இருக்கிறபடியால், அவைகளை ' மாயை' என்று சொல்வார்கள். 'மாயா' சப்தத்திற்கு இந்தப் பொருளுமுண்டு. ' விஹாரகஜூவ' என்றும் ' கீ ஶாவஜூவ ' என்றும் சொல்வதுபோல் இவ்விடத்தில் ' கவடகெஸரீ ' என்று ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது.

ஸரொஜஸஉஶா உஶா—அத்யுக்ரமான ரூபம் இது. இந்த ரூபத்தில் தென்படும் கண்கள் அக்நி குண்டங்கள் போல் இருத்தல் வேண்டும். ஹிரண்யன் விஷயத்தில் அவை அவ்விதமாகவே இருந்தன. ப்ரஹ்லாதன் விஷயத்திலோ அவை ஶீதளமான தாமரைப் பூப் போலவே இருந்தன. ஒரே விதமான கண் இப்படிப் பரஸ்பர விருத்தங்களான கார்யங்களுக்கு ஹேதுவானதைப் பார்த்துவிட்டு, 'இப்படியும் ஒரு வஸ்து உண்டோ? இது உண்மையான ஸிம்ஹ மன்று; இது கபட ஸிம்ஹமே' என்று ஆச்சர்யப்பட்டு ' கவட கெஸரிநு ' என்று ஆஹ்வாநம் செய்கிறாரென்றும் உபபாதிக்கலாம்.

வ்யதிஷிஜஃ—இதற்கு 'ஜகத்தில் தென்படும் க்ரமத்துக்கு வ்யதிரிக்தமாக' என்று பொருள் கொள்ளப்படுகிறது. அப்பொழுது 'வ்யதிஷிஜஃ' என்பதன் முக்யார்த்தம் கைவிடப் பட்டதாகின்றதே யென்று எண்ணி, அந்தப் பதத்தை ' வ்யதிவிஷஜஃ' என்று சிலர் மாற்றுகிறார்கள். இது பத ஸௌஷ்டவம் பொருந்தினதாக இல்லை

யென்பது வ்யக்தம். ஆனால், பொருள் ஒத்து வருகின்றது. லோகத்தில் தஹிக்கும் ஶக்தி யுடைய வஸ்துக்கள் ஆச்ரித அநாச்ரித விஶேஷத்தைப் பாராமலே எல்லாவற்றையும் தஹிக்கும். இந்தத் திருக்கண்கள் அநாச்ரிதர்களுக்கு அக்னி குண்டங்கள் போல் தாஹக மாக இருக்கையிலும், ஆச்ரிதர்களுக்குக் குளிர்ந்தவையாக இருக்கின்றன வாகையால், வ்யதிக்ராந்தமான (விபரீதமான) வ்யாபாரத்தைச் செய்கின்றன என்று சொல்லக் கூடுமன்றோ? பதம் தோஷ துஷ்ட மின்றிக்கே மாத்ரம் இருக்க வேண்டு மென்றெண்ணி னால் 'வ்ருதிஹிஷஜ்ஜ' என்பதையே எடுத்துக்கொள்ளலாம். அப்போழுது 'ஜகத் விலக்ஷணமாக வைத்யம் செய்துகொண்டு' என்று பொருள் கொள்ளுகிறார்கள். அப் பொழுது, 'யார் பிஷக்? பேஷஜம் எது! வ்யதிக்ரமம் எவ்விடத்தில்?' என்னும் ப்ரச் நங்கள் எழுகின்றன. இவைகளுக்கு அவர்கள் சொல்லும் ஸமாதாநமாவது:— அந்தத் திருக்கண்கள் அநாச்ரிதனை ஹிரண்யனைத் தஹித்தன. அந்தக் கண்களே தயா கார்யமாக ப்ரஹ்லாதனுக்குத் தாமரைப் புஷ்பம் போல் குளிர்ந்ததாக இருந்து கொண்டு போஷகங்களாயின. இப்படி சிகித்ஸைஓரிடத்திலும் பலஸித்தி மற்றோரிடத்திலும் இருப்பது ஜகத் விலக்ஷணமான வைத்யமன்றோ! இது தான் அவர்கள் சொல்லும் ஸமாதாநம். இந்த இரண்டு பாடங்களிலும் க்லேஶம் இருப்பதால், ஸ்வாமி அநுக்ர ஹித்த பாடம் இவை இரண்டையும் காட்டிலும் வேறொன்றாக இருக்குமோ வென்று ஸந்தேஹிக்க இடம் உண்டாகின்றது.

இந்த ச்லோகம் ஸ்வல்ப மாறுதலுடன் 'தயாசதகம்' என்னும் ஸ்தோத்ரத்திலும் காணப்படுகின்றது.

"ஓயெ வரஷ ஶிஸீஶிதா௯ ஓஊஜஸிஂஹஓ த்ஷூ நா
ஸலொஜஸஓரஶா ஓரஶா ஸஉ௯ஷி தாசூ தி ஓ௺ஊஶ௱ ஸெ ॥"

என்பது அவ்விடத்துப் பாடம். 'ஓயெ' என்பது ஸம்புத்தி; 'கவடிகெஸஶிநூ' என்பது ஸம்புத்தி; இவைகளின் ஸ்தாநத்தில் 'வரஷ ஶிஸீஶிதா௯ஃ' என்னும் ஷஷ்ட்யந்த மும் 'வ்ருதிஹிஷஜ்ஜ தெ வத்ஜதெ' என்பதன் ஸ்தாநத்தில் 'ஸஉ௯ஷி தாசூ திஓ௺ஊஶ௱ ஸெ' என்னும் பதமும் ப்ரயோகிக்கப் பட்டிருக்கின்றன. தயாஶதகத்தில் தயையைப் பார்த்து ஸம்பாஷணம். ஆகையால் 'ஹே தயே! நீ ஸமுதிதாக்ருதியாகக் காணப்படுகிறாய்.' என்று தயாஶதகத்திலும், இவ்விடததில் பகவானைப் பாத்து ஸம்பாஷணமானதால் 'ஹே பகவந்! உன்னுடைய தயை இம்மாதிரி செய்து விட்டது' என்று இவ்விடத்திலும் பேதம் தென்படுகிறது. அவ்விடத்தில் உல்லேகம் என்னவென்றால், ராமக்ருஷ்ணாதி ரூபங்களில் அத்யாத்ம ஸ்வரூபம் பரிபூர்ணாவிர்ப்பாவ முள்ளதா யிருக்குமாப் போல ஸ்ரீ ந்ருஸிம்ஹ ரூபமான பரம புருஷனுடைய திருக்கண்களாகிற திவ்ய விக்ரஹத்திலும் ஆவிர்ப்பூதமான பரிபூர்ண ஸ்வரூபத்தை உடையவளா யிருகிறாய். [ஸஉ௯ஷி தாசூ திஃ நன்றாக ஆவிர்ப்பவித்திருக்கும் ஆக்ருதியை உடைத்தா யிருக்கிறாய்.] ஸர்வ ஜநங்களா லும் கண்ணாக் கண்டாற் போல விஶதமாக நிச்சயிக்கப் பட்டு நிற்கிறாய் என்பதுதான் தாத்பர்யம். இவ்விடத்திலும் ஒரு வ்யதிரக்மர் த்வநிக்கிறது' தயை ஸ்தந்யம் கொடுக் கிறவள்; ப்ரஹ்லாதன் அதைப் பாநம் செய்கிறவன். ஆக்ருதி பரிபூர்த்தி யாகிற பாந பலமோ ஸ்தந்யத்தைக் கொடுக்கும் தயையினிடத்தில் காணப்படுகிறது. இது ஒரு வைபரீத்ய மன்றோ?

த்வயி ரக்ஷதி ரக்ஷகை: கிமந்யை:
த்வயி சாரக்ஷதி ரக்ஷகை: கிமந்யை: ।
இதி நிஸ்சிததீ: ஸ்ரயாமி நித்யம்
ந்ருஹரே! வேகவதீதடாஸ்ரயம் த்வாம் ॥ 8

---

8. 'இப்படி உக்ர ரூபத்தையுடைய ஸ்ரீ ந்ருஸிம்ஹனும் ரக்ஷகனுவனே!' என்னும் ஸங்கைக்குக் கீழ் ச்லோகத்தால், 'ஆச்ரிதர் விஷயத்தில் அந்த உக்ரத் தன்மை மாறி ஸௌம்யமான ஆக்ருதியுடன் ஸேவை ஸாதிக்கிறபடியால் அவனை ரக்ஷகனுக வரிக்கலாம்' என்றொரு ஸமாதானத்தை அநுக்ரஹித்தார். 'ஒருவித உக்ரத் தன்மையும் கலசாத வேறொரு ரக்ஷகனைத் தேடிப் போகலாகாதோ?' என்று உதிக்கும் ஸங்கைக்கு, அடுத்த இந்த ச்லோகத்தால் ஸமாதானத்தை அநுக்ரஹிக்கிருர். 'நீ யன்ருே ஸமஸ்த ஜகத்துக்கும் ரக்ஷகன்? ரக்ஷாபேக்ஷிகள் எப்பொழுது வருவார்கள் என்று ஸர்வத்ர ஸந்நிஹிதனுக இருக்கிறவன் நீ யன்ருே! அப்படிப்பட்ட நீ என்னை ரக்ஷியாமல் வேறு யார் என்னை ரக்ஷிக்கக் கூடும்?' என்பது விவக்ஷிதம்.

[ப—ரை.] ஹே ந்ருஹரே—ஹே ந்ருஸிம்ஹனே! த்வயி—நீ, ரக்ஷதி—ரக்ஷிக்கும் பக்ஷத்தில், அந்யை:—மற்ற, ரக்ஷகை:—ரக்ஷகர்களால், கிம்—என்ன? த்வயி—நீ, அரக்ஷதி—ரக்ஷியாமலிருந்தால், அந்யை:—மற்ற, ரக்ஷகை:—ரக்ஷகர்களால், கிம்—என்ன? இதி—இவ்வாறு, நிஸ்சிததீ:—நிச்சய ஜ்ஞானத்தை உடையவனுய், வேகவதீதடாஸ்ரயம்—வேகவதீ நதியின் கரையில் எழுந்தருளியிருக்கும், த்வாம்—உன்னை, நித்யம்—எப்பொழுதும், ஸ்ரயாமி—ஆச்ரயிக்கிறேன்.

த்வயி ரக்ஷதி—ஜநங்களை ரக்ஷிக்கவேண்டுமென் றன்ருே, நீ விஷ்ணு வென்னும் அவதாரத்தைச் செய்திருக்கிருய்? 'ஜகத்ஸ்ருஷ்டிம் ஸ்திதிவிநாசௌ ஸம்ஹிதாவதார:.' ஸ்ரீமந் நாராயணனுக்கு ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் முதலியவை வ்யாபாரங்களாக இருந்தாலும், அவை யெல்லாம் ப்ரஜைகளின் ரக்ஷணத்திற்காகவே அவனுல் செய்யப்படுகின்றன. ['ரக்ஷார்த்தம் ஸர்வபூதாநாம் விஷ்ணுத்வமுபஜக்மிவாந்'.] நிற்க: அவன் ஸர்வ பல ப்ரதன். இம்மாதிரியான ஸர்வ ஸக்தித்வம் மற்றொருவரிடமும் இல்லையாகையால், இவனை ஆச்ரயித்தால் மற்றொருவரையும் ஆச்ரயிக்கவேண்டியதில்லை என்பது தாத்பர்யம்.

த்வயி அரக்ஷதி—பகவான் ஒருவனை நிக்ரஹிக்கவேணு மென்று ஸங்கல்பித்து விட்டால், அவனை மற்றை எவன் அந்த நிக்ரஹத்திலிருந்து ரக்ஷிக்க ஸக்தனுவன்?

" ப்ரஹ்மா ஸ்வயம்பூஸ்சதுராநநோ வா
ருத்ரஸ்த்ரிநேத்ரஸ்த்ரிபுராந்தகோ வா ।
இந்த்ரோ மஹேந்த்ரஸ்ஸுரநாயகோ வா
த்ராதும் ந ஸக்தா யுதி ராமவத்யம் ॥ "

ஸ்ரீராமன் ஒருவனைக் கொல்ல நினைத்தால் அவனைத்தடுக்க ப்ரஹ்மாவாகட்டும் ருத்ரனுகட்டும் இந்த்ரனுகட்டும் ஒருவரும் ஸக்தராக மாட்டார்.

வேகவதீ தடாஸ்ரயம்—உன்னை அடைவதற்குக் காலம் பார்த்து வரவேண்டுமா! இடம் பார்த்து வரவேண்டுமா? நீ எப்பொழுதும் இவ்விடத்திலேயே ஸந்நிஹிதனு யிருக்கிரு யல்லவா!

இத்தம் ஸ்துத: ஸக்ருதிஹாஷ்டபிரேஷ பத்யை:
ஸ்ரீ வேங்கடேச ரசிதைஸ் த்ரிதசேந்த்ர வந்த்ய: ।
துர்தாந்த கோர துரித த்விரதேந்த்ர பேதீ
காமாஸிகா நரஹரிர் விதநோது காமாந் ॥ 9.

கவிதார்க்கிக ஸிம்ஹாய கல்யாண குணசாலினே ।
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்த குரவே நம: ॥

---

9. இவ்வாறு எட்டு ச்லோகங்களால் ' ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரம் செய்த ஸ்ரீமந் நாராயணனே எல்லாராலும் ஆச்ரயணீயன்; அவனை ஆச்ரயித்தால் அவன் நிச்சயம் ஆச்ரயித்தவர்களை ரக்ஷிப்பன்' என்பதை நிரூபித்துவிட்டு, இந்த ஸ்தோத்ரத்தை அநுஸந்தித்தால் காமாஸிகா ந்ருஸிம்ஹன் அப்படி அநுஸந்திப்பவர்க்கு ஸகல பலத்தையும் கொடுப்பன் என்று பலத்தைச் சொல்லி ஸ்தோத்ரத்தைத் தலைக்கட்டுகிறார்.

[ப—ரை.] ஸ்ரீ வேங்கடேச ரசிதை:-ஸ்ரீ வேங்கடேசனால் செய்யப் பட்ட, அஷ்டபி: பத்யை:-எட்டு ச்லோகங்களால், இத்தம்-இவ்வாறு, இஹ-இவ்விடத்தில், ஸக்ருத்-ஒரு தடவை, ஸ்துத:-ஸ்தோத்ரம் செய்யப் பட்டவனுய்க் கொண்டு, த்ரிதசேந்த்ர வந்த்ய:-தேவர்களுள் ச்ரேஷ்டராயிருக்குமவர்களுக்கும் பூஜ்யராயும், துர்தாந்த-அடக்க முடியாத, கோர-பயங்கரங்களான, துரித-பாபங்களாகிற, த்விரதேந்த்ர-யானை ச்ரேஷ்டங்களை, பேதீ-பிளக்கிறவனுயு மிருக்கும், ஏஷ காமாஸிகா நரஹரி:-காமாஸிகா க்ஷேத்ரத்தில் எழுந்தருளியிருக்கும் இந்த ந்ருஸிம்ஹன், காமாந்-(ஆச்ரிதர்களுடைய) இஷ்டங்களை, விதநோது-பூர்த்தி செய்துவைக்கட்டும்.

ஸ்ரீ வேங்கடேச ரசிதை:—இதனால் இந்த ஸ்தோத்ரத்தை அநுக்ரஹித்தருளினவரின் வைலக்ஷண்யம் சொல்லப்பட்டதாகிறது. அநுஸந்தாநத்திற்கு அர்ஹமான ஸூக்திகளின் கர்த்தா ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பந்நராயிருத்தல் வேண்டும்- அப்படியிராவிட்டால் நாய்த் தோலில் கட்டிவரும் கங்காதீர்த்தம் போல், அது பரிக்ரஹாநர்ஹமேயாகும். அப்படிப்பட்ட வைலக்ஷண்யம் இந்த ஸ்தோத்ரத்துக்கு உண்டு என்பதை விளக்குகிறது இந்தப் பதம்.

இத்தம் இஹ ஸக்ருத்—இவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கும் க்ரமத்தில் அநுஸந்தாநம் செய்தல் வேண்டும். அதிலும் வேகவதீ தடத்தில் இருந்து கொண்டு அநுஸந்தித்தால் அதற்கு ஓர் ஏற்ற முண்டு. ஒரு தடவை அநுஸந்தித்தாலும் பகவதநுக்ரஹத்துக்கு அது போதும். [‘ஸக்ருதேவ ப்ரபந்நாய.’]

அஷ்டபி:—‘எட்டு’ என்னும் ஸங்க்யைக்கு ஓர் ஏற்ற முண்டு. இந்த ஸ்தோத்ரம் திருவஷ்டாக்ஷரம் போன்றது என்பது த்வநிக்கின்றது.

த்ரிதசேந்த்ர வந்த்ய:—ஸாமாந்ய ஜநங்களால் பூஜ்யரென்று கொண்டாடப் பட்ட தேவர்களாலும் இவர் பூஜிக்கப்படத் தகுந்தவர்.

189237